

நூர்உல்எயின்



ரீஜெண்ட்



கோகினூர்



ஹோப்

# ‘சூப்பர்’ வைரங்கள்

கற்களில் மிக விலை உயர்ந்தது வைரம். ஒரு காலத்தில் இந்தியாவின் கோல்கொண்டா பகுதியில் உள்ள கொல்லூர் சுரங்கத்தில் ஏராளமான வைரம் கிடைத்தது. இதனால் அங்கு வைரச் சந்தையே பல காலம் நடந்துள்ளது.

உலகின் சில பிரபல வைரங்கள் இதோ:

1. நூர்உல்எயின்– உலகின் மிகப் பெரிய வைரம். இதற்கு ‘கண்ணின் ஒளி’ எனப் பெயர் உண்டு.
2. ரீஜென்ட்– பிரான்ஸ் லாரன்ஸ் அருங்காட்சியகத்தில் உள்ளது. 410 கேரட் மதிப்பு, எடை 82 கிராம்.
3. கோகினூர் வைரம்– இங்கிலாந்தில் இருக்கிறது. 105 கேரட். எடை 21.6 கிராம்.
4. ஹோப் வைரம்– வாஷிங்டன் அருங்காட்சியகத்தில் உள்ளது. எடை 9.10 கிராம். கேரட் மதிப்பு 45.52.

– ராஜிராதா, பெங்களூர்.

# வரவு

அலமாரி, கிராம்பு, சாவி, ஜன்னல், பரங்கிக்காய் – இச்சொற்கள் போர்ச்சிக்கிசிய வரவுகள்.

உ.ராமநாதன், நாகர்கோவில்.



# மனசுக்குள் நான் உன்னை...





## பட்டுக்கோட்டை பிரபாகர்

**1**

“யோவ் பெரிசு! எங்கய்யா பார்க்கறே? இன்னும் கொஞ்சம் ‘டில்ட்–அப்’ பண்ணு. என் கைக்கு ‘சென்டர்’ பண்ணு” – உதவி கேமிராமேன் தன் வலது கையை உயர்த்தி ‘பொசிஷன்’ காட்ட....

ஒரு கிலோவாட் பல்பை– சொல்லப்பட்டபடி கோணம் உயர்த்தி வைத்தார் ‘லைட் பாய்’

ஆறுமுகம்.

எந்தப் படப்பிடிப்புக் குழுவுடன் வேலை பார்த்தாலும் யாரும் அவரைப் பெயர் சொல்லி அழைப்பதில்லை. பெரிசு இல்லையென்றால் அய்யா தாடிக்காரரே!

'லைட் பாய்' என்பது தொழில் சொல். நியாயமாகப் பார்த்தால் 'லைட் மேன்' என்றுதான் அவரைக் குறிப்பிட்டாக வேண்டும். ஐம்பத்தி இரண்டு வயது. தலையில் நரையில்லை. ஆனால், அடர்த்தியான தாடியில் நிறைய நரை வந்துவிட்டது.

தமிழர்தான். ஆனால், வேலை தேடி மும்பை போய் எதுவும் கிடைக்காமல் ஒரு 'அவுட்டோர் யூனிட்' வேனின் கிளீனராக வாழ்வைத் தொடங்கி– 'லைட்பாய்' ஆக மாறி– கல்யாணம் செய்து, குழந்தை பெற்று... மனைவியை இழந்து, மகளை வளர்த்து படிக்க வைத்து... இப்படி வாழ்வின் நிறைய வருடங்களை மும்பையிலேயே கழித்துவிட்டு, இப்போது சென்னைக்கு வந்து 'செட்டில்' ஆகி ஒரு ஆண்டாகிவிட்டது.

தி.நகர் குப்புசாமி தெருவில் கே.கே.எஸ். 'அவுட்டோர் யூனிட்'டின் அலுவலகம் இருக்கிறது. அவர்களிடம் மொத்தம் எட்டு 'அவுட்டோர் யூனிட்'டுகள், பன்னிரண்டு கேமிராக்கள் இருக்கின்றன.

ஆறுமுகம் சென்னை வந்ததும் யூனியனுக்குச் சென்று தன் மும்பை யூனியன் அடையாள அட்டையைக் காட்டி, உரிய பணம் கட்டி உறுப்பினர் ஆகிவிட்டார். மும்பையில் இருபது வருட 'சர்வீஸ்' என்றதுமே உடனே வேலைக்கு சேர்த்துக்கொண்டார்கள்.

வெள்ளையில் காட்டன் சட்டை, அரை டவுசர்– இதுதான் அவரின் வேலை நேர உடை. அவராகவே அமைத்துக்கொண்ட 'யூனிபார்ம்'. நெற்றியில் இரவு, பகல் எந்த நேரமும் குங்குமம் இருக்கும்.

எந்தச் சூழ்நிலையிலும் பீடி, சிகரெட் பழக்கம் ஏற்படவே இல்லை. ஆனால், 'பான் மசாலா' வழக்கம் உண்டு. டவுசர் பாக்கெட்டில் பாலித்தின் பையில் போடப்பட்ட 'ஜர்தா பீடா' எப்போதும் 'ஸ்டாக்' இருக்கும்.

"ஏன்யா தாடி! உனக்கென்ன செவுடா? இன்னொரு 'பில்டர்' மாட்டுன்னு ரெண்டு தடவை சொல்லிட்டேன்."

'டிராலி'யின் மேல் பொருத்தப்பட்டு இருந்த 'ஏர்ரி பிளெக்ஸ்' கேமிராவில் ஜூம் லென்ஸைப் பொருத்திக்கொண்டிருந்த 'ஆபரேடிவ்' கேமிராமேன் பன்னீர் செல்வம் சட்டென்று நிமிர்ந்தான்.

"எம்ப்பா தனபால், உன் வயசென்ன, அவர் வயசென்ன? கொஞ்சம் மரியாதையாப் பேசு" என்றான்.



"ஏன், இப்ப என்ன மரியாதை குறைச்சலாப் பேசிட்டேன்?" என்றான், அந்தத் தனபால் சற்றே கோபமாக.

"காது செவுடான்னு கேக்கலை?"

"ரெண்டு தடவை சொல்லியும் சிலை மாதிரி நின்னா அப்படித்தான் யாரும் கேப்பாங்க. உன் வேலையைப் பாருய்யா நீ."

பன்னீர்செல்வத்துக்கு சுர்ரென்று கோபம் வந்துவிட்டது.

கேமிராவை விட்டுவிட்டு தனபால் அருகில் வந்தான்.

"அவரோட அனுபவமும், உன்னோட வயசும் ஒண்ணு. ஏதோ ஞாபகத்தில் கவனிக்காம இருந்திருக்கலாம். இன்னொரு தடவை சொன்னா குறைஞ்சாப் போயிடுவே? மன்னிப்பு கேளு! என்ன தலைவரே, பேசாம நிக்கிறீங்க?"

ஆறுமுகத்தை அவன் 'தலைவரே' என்றுதான் அழைப்பது வழக்கம்.

அவரை அவனுக்குப் பிடிக்கும். அன்போடு அவனாக வந்து அவரிடம் அடிக்கடி பேசுபவன்.

"இல்லை தலைவரே! இந்த மாதிரியெல்லாம் நீங்க இடம் கொடுக்கக் கூடாது."

"அட! நீங்க போங்க பன்னீரு"– என்று ஆறுமுகமே அவன் புஜத்தில் கைவைத்து, கேமிராவை நோக்கித் தள்ளி நடத்தினார்.

சற்றுத் தள்ளி அந்த புதுமுக நடிகைக்கு காட்சியை விளக்கிக்கொண்டு இருந்தார் டைரக்டர்.

அவரைச் சுற்றி 'கிளாப் போர்டு', 'ஷூட்டிங் ஸ்கிரிப்ட்', 'ஷாட் ரிப்போர்ட்', 'கண்டியூனிட்டி நோட்' என்று ஆள் ஆளுக்கு ஒன்றை ஏந்திக்கொண்டு உதவி டைரக்டர்கள் நின்றார்கள்.

அந்த 'ஷாட்'டுக்கான 'லைட்டிங்' செய்து முடிக்கப்பட்டதும், 'பீல்டை'விட்டுச் சற்று விலகி வந்து நெற்றியில் முத்துக் கோர்த்திருந்த வியர்வையை வழித்துப் போட்டார் ஆறுமுகம்.

டவுசர் பாக்கெட்டில் இருந்த ஜர்தா பீடாவை எடுத்து வாயில் வைத்துக் கடிக்கத் தொடங்கினார்.

இனி அந்த 'ஷாட்'டில் எடுக்கப்படும் 'டேக்' ஓ.கே.யாகி அடுத்த 'ஷாட்' தொடங்கும் வரை அவருக்கு வேலை கிடையாது.

அந்த 'ஷாட்' முடிந்ததும் மதிய உணவு இடைவேளை என்று அறிவிக்கப்பட்டது. இவர் இருந்த இடத்தை நோக்கி பன்னீர் செல்வம் மெதுவாக நடந்து வந்தான்.

"என்னாச்சு தலைவரே, உடம்பு எதுவும் சரியில்லையா

உங்களுக்கு?"

"இல்லை தம்பி. காலையில புறப்பட்டப்ப என் பொண்ணு விரல்ல வெட்டிக்கிட்டா. நிறைய ரத்தம் வந்திடுச்சி. டாக்டர்கிட்ட போயிட்டு வந்துடுன்னு சொல்லிட்டு வந்தேன். பேர்னாளா, இல்லையான்னு தெரியலை. அதே நினைப்பால வேலையில கவனம் தவறிட்டேன்."

"இருந்தாலும் நேத்து முளைச்ச பய 'செவுடா?'ன்னு கேக்கறப்ப அமைதியா நின்னுட்டீங்களே! 'யாருடா செவுடு?' பல்லைப் பேத்துடுவேன்'னு ஒரு மிரட்டு மிரட்டி இருந்தா... அரண்டு போறவன்தான் அவன்."

"அதை விடுங்க தம்பி. என் பேர்ல தப்பு இருக்கிறப்ப அவனைச் சொல்றதில் அர்த்தமில்லை. இன்னைக்கு இரவு ஷூட்டிங். அப்படியே தொடரப் போறதா சொன்னாங்களே, அப்படியா?"

"அப்படித்தான் சொல்றாங்க. 'லைட் பிளான்' பண்ணிருக்காங்க. மாஸ்டர் ஐதராபாத்லே இருந்து கார்ல வந்துக்கிட்டிருக்காராம். அவர் வந்து சேர்ந்துட்டாருன்னா அப்படியே இடைவெளி இல்லாம தொடர்ந்து ஷூட்டிங் நடக்கும்னு சொல்றாங்க. வாங்க, சாப்பிடப் போகலாம்."

"இல்லை தம்பி... நீங்க போங்க. எனக்குப் பசி இல்லை."

"நல்ல கதை! நெருப்பு மாதிரி சுடற 'லைட்'டுக்குப் பக்கத்தில் நின்னு காலையில இருந்து வேலை பார்த்தீங்க. பசி இல்லைன்னா எப்படி? அட... உங்கப் பொண்ணுக்கு சரியாப் போய்டும் தலைவரே. சின்ன காயம்தானே! வாங்க... எந்திரிங்க."

அவருக்குக் கைகொடுத்து எழுப்பினான் பன்னீர்செல்வம்.

## 2

'எக்ஸ்கியூஸ் மீ மேடம்' என்று வாசலில் குரல் கேட்டது.

அவன் ஜீன்ஸ் அணிந்திருந்தான். 'டி ஷர்ட்', பங்க் தலைமுடி, காலில் ஷூ, கையில் புகையும் சிகரெட், வீட்டு வாசலில் 'ஸ்போர்ட்ஸ் மாடல்' சின்ன சைக்கிள்.

அவனைப் பார்த்ததுமே எரிச்சல் ஏற்பட்டது அவளுக்கு.

'இந்த வீட்டுக்கு அவன் வருவது இது மூன்றாவது தடவை. வேண்டுமென்றே வம்பு பண்ணுவதற்காக வருகிறவன். இரட்டை அர்த்தத்தில் பேசுகிறான்.



முதல் தடவை வந்தபோது ஷூ அணிந்த காலுடன் உள்ளே வந்து, 'மேடம், நான் படிச்சிருக்கேன். வேலை கிடைக்கலை. உங்ககிட்ட உதவியாளரா சேரலாம்னு வந்தேன். காஜா எடுக்கற வேலையா இருந்தாலும் சரிதான். எப்ப இருந்து வேலைக்கு வரட்டும்?' என்றான், கள்ளத்தனமாகச் சிரித்து.

'எனக்கு உதவியாளர் யாரும் தேவையில்லை. தேவைப்படறப்ப சொல்றேன். இப்ப வெளியில போறீங்களா?' என்றாள், வெடுக்கென்று.

'போய்டறேன். என் பேர்கூட தெரிஞ்சுக்க வேணாமா நீங்க?'

'உங்க பேரை நான் தெரிஞ்சுக்க வேண்டிய அவசியமில்லை.'

'பார்த்தீங்களா இப்படி வெட்டியாப் பேசறீங்களே! இப்பதானே சொன்னீங்க. உதவியாளர் தேவைப்படறப்ப சொல்றேன்னு. என் பேர், விலாசம் எல்லாம் தெரிஞ்சிருந்தாதானே சொல்ல முடியும்.

என் பேர் தீபக். இந்த வீட்ல அழகா தைக்கிற பொண்ணு இருக்குன்னு சொன்னாங்க. தைக்கிற பொண்ணும் அழகா இருக்கும்னு சொல்லமாம விட்டுட்டாங்க."

சுர்ரென்னு கோபம் ஏற... அவனை முறைத்தபோது–

'டேக் இட் ஈஸி' என்று புன்னகைத்துவிட்டுப் போய்விட்டான் அவன்.

அப்பாவிடம் சொல்லலாமா? என்று யோசித்து வேண்டாம் என்று விட்டுவிட்டாள்.

போன வாரம் தீபக் மறுபடி வந்திருந்தான்.

இந்த முறை கையில் ஒரு துணி 'பார்சல்' இருந்தது.

"முறைக்காதீங்க மேடம். நான் வேலை கேட்டு வரலைங்க. இந்தத் தடவை வாடிக்கையாளரா வந்திருக்கேன். இந்தாங்க துணி. இதுல ரெண்டு மீட்டர் இருக்கு. உங்களுக்குப் பிடிச்ச 'டிசைன்'ல எனக்கு சட்டை தச்சிக் கொடுங்க."

"நான் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும்தான் தைப்பேன். இடத்தைக் காலி பண்ணுறீங்களா?" என்றாள், சூடாக.

"உங்க வீட்ல வந்து குடியிருக்கேனா என்ன... காலி பண்ணச் சொல்றீங்களே! ஆண் குழந்தைக்கு சட்டை தச்சிக் கொடுத்திருக்கீங்களே. நான் பார்த்தேனே!"

"அதான் சொன்னனே, குழந்தைங்க துணிதான் தைப்பேன்னு."

"ஒரு சின்னப் பையனுக்கு தைக்கிற அதே சட்டையை பெரிய அளவில் தைக்கப் போறீங்க. அவ்வளவுதானே! மும்பை 'ஸ்பெஷலிஸ்ட்'டுக்கு இது என்ன பிரமாதமா? வாங்க... அளவெடுத்துக்கங்க. யாராச்சும்

வருமானத்தை வேணாம்னு சொல்வாங்களா? உங்க அழகான கையால தைக்கப் போறதால வேணும்னா பத்து, இருபது ரூபா அதிகமா கூலி தர்றேன்."

ஆத்திரம் ஏற்பட்டாலும் அவனை எப்படி சமாளிப்பது என்று அவளுக்குப் புரியவில்லை!

"ஏன் இப்படி என்கிட்ட அடிக்கடி வந்து வம்பு பண்ணுறீங்க?" என்று நேரடியாகவே கேட்டுவிட்டாள்.

"எல்லாம் அம்பிகை அருளுக்காகத்தான். தீபக் இந்த அம்பிகைக்கு தீபாராதனை காட்டணும். பாலாபிஷேகம் நடத்தணும். எங்கே, எப்போன்னு உற்சவ தேதி சொல்லிட்டா பரவாயில்லை."

'யு... ராஸ்கல்' என்று அவனை அடிப்பதற்குக் கையை ஓங்கினாள்.

ஓங்கின கையைத் தடுத்துப் பிடித்தான் அவன்.

"அப்பன் சினிமாவுல இருக்கிறவன். அதுவும் பல வருஷம் மும்பையில இருந்தவன். நீ என்ன கண்ணகி வேஷம் போடறியா? பெரிய இடத்திலே இருந்து கார் அனுப்பி கூட்டிக்கிட்டுப் போனாதான் போவியா? நேத்து கூடப் பார்த்தேனே உன்னை– எம்.எல்.ஏ. வீட்டு ஆடம்பர கார்ல. மறுக்க முடியுமா நீ?"

"அடச் சீ! அவங்க வீட்டு அம்மாவுக்கும், குழந்தைக்கும் நான்தான் துணி தச்சிக் கொடுக்கறேன். அதுக்காக அழைச்சுட்டுப் போனாங்க. நாங்க கவுரவமா வாழ்ந்துக்கிட்டு இருக்கோம். எங்களைக் கேவலப்படுத்தாதே. தயவு செஞ்சி வெளியில போ" என்று கிட்டத்தட்ட கண்ணீரோடு கெஞ்சினாள்.

அவளை உற்றுப் பார்த்துவிட்டுப் போய்விட்டான்.

'இனி வரமாட்டான்' என்று நினைத்தால்...

இதோ மறுபடி வந்து நிற்கிறான்!

புன்னகைத்தபடி உள்ளே வந்து அவனாக நாற்காலி எடுத்துப் போட்டு அமர்ந்தான்.

"இந்தத் தடவை எந்த சாக்கு போக்கும் சொல்ல முடியாது" என்று ஒரு ஜாக்கெட் துணியை தையல் எந்திரத்தின் மேல் போட்டான்.

"எனக்கு சட்டைதானே தைக்க முடியாதுன்னு சொன்னே? ஜாக்கெட் தச்சிக் கொடு என் காதலிக்கு."

"சரி, அளவு ஜாக்கெட் எங்கே?"

"அவ கிட்டத்தட்ட உன் 'சைஸ்'தான் இருப்பா. உன் அளவுக்கு தச்சிக் கொடு. இப்பப் போட்டுருக்கியே இதே மாதிரி இருக்கமா





இருக்கட்டும். முதுகுல பெரிய ஜன்னல் வெச்சி காத்தோட்டமா விட்டுரு."

"இதோ பாரு... எங்க அப்பா பயங்கரமான கோபக்காரரு. நீ என்கிட்ட வாலாட்டறதை இதுவரைக்கும் நான் அவர்கிட்ட சொல்லலை. சொன்னா நடக்கறதே வேற. அவர் வேலை பார்க்கற இடத்தில் நூறு பேருக்கும் மேல் வேலை பார்க்கறாங்க.

அவர் யூனியன்ல செயலாளர். ஒரு வார்த்தை சொன்னா அத்தனை பேரும் உன்னை உண்டு, இல்லைன்னு பண்ணிடுவாங்க. பெரிய பிரச்சினைகள் எதுவும் வேணாம்னுதான் இத்தனை நாள் பொறுமையாப் போனேன். இப்ப கடைசி தடவையா எச்சரிக்கை செய்கிறேன்.

இனிமே எதாச்சும் சாக்கு வெச்சிக்கிட்டு என் வீட்டுக்குள்ளே வந்தேன்னா... அடுத்த வேளை சோறு, உனக்கு ஜெயில்லதான் கிடைக்கும்" என்றாள் அம்பிகா, ஆவேசமாக.

"சாந்த ஸ்வரூப தரிசனம்தானே வழக்கமா கிடைக்கும். இன்னைக்கென்ன புதுசா ருத்ர தாண்டவம்? இப்ப சொல்றேன்... நல்லாக் கேட்டுக்க. நீ தைக்கிறதுக்காக ஒரு துணி எடுக்கறே. அதுல 'மார்க்' பண்ணுறே.

மார்க் பண்ணினதுக்கு அப்புறம் தைக்காம திருப்பிக் கொடுத்திருக்கியா? அந்த மாதிரிதான் அம்பிகா, உன்னை நான் 'மார்க்' பண்ணிட்டேன். வடை, பாயசத்தோட ஒருநாள் நிச்சயமா விருந்து உண்டு. இலை போட்டு ரெடியா இரு கண்ணு" என்று அவள் கன்னத்தில் செல்லமாகத் தட்டிவிட்டு, தன் முகத்தில் வந்து விழுந்த அந்த ஜாக்கெட் துணியை எடுத்துக்கொண்டு வேகமாக வெளியேறினான் தீபக்.

பொறுமையின் எல்லை இதுதான்.

இனிமேலும் அப்பாவிடம் மறைப்பதில், சங்கோஜப்படுவதில் அர்த்தம் இல்லை!

தீர்மானித்தாள் அம்பிகா.

## 3

**ப**ன்னீர்செல்வம் தன் வீட்டு வாசலில் நிறுத்தி– ஸ்கூட்டரைத் துடைத்துக்கொண்டு இருந்தான். அருகில் முருங்கை மரத்தில் அணில்



ஒன்று யோசித்து, யோசித்து ஏறிக்கொண்டு இருந்தது.

வாசலுக்கு வந்தாள் அவன் அம்மா கோமதி.

"ஏம்ப்பா, டிபன் சாப்பிட்டுட்டு அப்புறம் வந்து துடைக்கலாமில்ல? இன்னைக்குத்தான் வேலை இல்லைன்னியே! மணி எட்டரை ஆகுது."

ஸ்கூட்டரைப் பூட்டி சாவி எடுத்து வந்து உள்ளே ஆணியில் மாட்டியபோது, சுவரின் ஓலையில் லேசான ஒட்டடையைப் பார்த்தான் பன்னீர்செல்வம்.

"என்னம்மா பண்ணுறது இதை? போன வாரம்தானே வீடு முழுக்க ஒட்டடை அடிச்சேன்?" என்று ஒட்டடைக் குச்சியை எடுத்து வந்தான்.

"வீட்ல நிறைய ஒட்டடை பிடிச்சா, அதிகமா பணம் சேரும்னு சொல்லுவாங்க பன்னீர்."

"எனக்கு பணம் சேரலைன்னாலும் பரவாயில்லை. சுத்தமா இருக்கணும். கருமம்! பார்க்க சகிக்கலை" என்று ஒட்டடையை சுத்தம் செய்துவிட்டுப் பிறகுதான் குளிக்கச் சென்றான்.

சிற்றுண்டி சாப்பிடும்போது சட்னி பரிமாறிய அம்மா சொன்னாள்... "பன்னீர், பக்கத்து வீட்டு தசரதன், சிங்கப்பூர் போயிட்டு வந்திருக்காரு. வெளிநாட்டு செயின் ரெண்டு, மூணு கொண்டு வந்திருக்கார். விக்கிறாராம். காமிச்சார்.

எல்லாமே நல்லா இருக்கு. நீ போய்ப் பாரேன். உனக்குப் பிடிச்சிருந்தா ஒரு செயினை வாங்கிப் போடேன். பேங்கில் இருந்து நான் பணம் எடுத்துத் தர்றேன்."

"எதுக்கும்மா இப்ப செயின்?"

"மருமகள்னு ஒருத்தி வரத்தானே போறா? சொன்னாக் கேளேன். எல்லாத்துக்கும் எதுக்கு எதிர்வாதம் பண்ணுறே?"

"சரி...சரி... பார்க்கறேன்" என்றான் பன்னீர்.

சாப்பிட்டு கைகழுவிவிட்டு, உடனே பக்கத்து வீட்டுக்கு வந்தான்.

தசரதன் காப்பி குடித்துக்கொண்டு இருந்தவர், "வாங்க தம்பி... ஏய் ருக்மணி! தம்பிக்கு ஒரு தம்ளர் காப்பி கொண்டா" என்றார்.

"இல்லைங்க. இப்பதான் குடிச்சேன். நீங்க குடியுங்க. சிங்கப்பூர்லே இருந்து வாங்கிட்டு வந்த செயினை அம்மா பார்க்கச் சொன்னாங்க" என்று எதிர் நாற்காலியில் அமர்ந்து– அருகில் இருந்த செய்தித்தாளை எடுத்துக்கொண்டான்.

வெள்ளித்திரை பகுதியில் 'ராஜா வந்தார்' படத்தின் படப்பிடிப்பிலே... என்று குறிப்பிட்டு வெளியிடப்பட்டு இருந்த புகைப்படத்தில்– அவனுடைய தலையும் சின்னதாகத் தெரிந்ததைப் பார்த்தான்.

"செயின் வாங்கிட்டு வந்தேன் தம்பி. ஒன்னு சொந்தத்துக்கு வச்சிக்கிட்டேன். இன்னொண்ணை நேத்துதான் வித்தேன். இன்னும் ஒரு செயின்தான் விக்கிறதுக்கு இருக்கு" என்றார் தசரதன்.

"காட்டுங்க, பார்க்கலாம்."

ஒரு தம்ளரில் காப்பியோடு வந்த அவர் மனைவி ருக்மணி, "இந்தாங்க தம்பி" என்று தம்ளரை நீட்டினாள்.

அவளின் ஒரு விரல் லேசாக காப்பியின் மேல் பட்டுக்கொண்டு உள்ளதைப் பார்த்து முகம் சுளித்த பன்னீர்செல்வம் வாங்கி டீப்பாயில் வைத்தான்.

"ருக்மணி, தம்பிக்கு அந்தச் செயினைக் காமி" என்றதும், அவள் தன் கழுத்தில் அணிந்திருந்த செயினைக் கழற்றி, பின்னலில் இருந்து விடுவித்து நீட்டினாள்.

"இது இல்லைங்க... நீங்க விக்கிறதா உள்ள செயினைக் காட்டுங்க."

"இதுதான் விக்கிற செயின். சும்மா ஆசைக்கு கழுத்தில் போட்டிருந்தா. வாங்கிப் பாருங்க. மலேயா பவுன். அந்த 'டச்' இங்கே கிடைக்கிறதில்லை. என்ன நிறம் பாருங்க!"

சட்டென்று எழுந்துகொண்ட பன்னீர்செல்வம், "தப்பா நினைக்காதீங்க. எனக்கு 'டிசைன்' பிடிக்கலை. இப்பதான் குடிச்சதால மறுபடி காப்பி குடிக்க முடியாது. வேற யார்கிட்டயாவது கொடுத்துடுங்க. நான் வர்றேன்" என்று– செயினைக் கையில் கூட வாங்கிப் பார்க்காமல் புறப்பட்டுவிட்டான்.

அம்மாவிடம் வந்து விவரம் சொல்லி, "அவங்க பயன்படுத்திய நகையை எதுக்கும்மா வாங்கணும்?" என்றான்.

"புது செயினுங்கறதால ஆசையா கழுத்தில் போட்டிருப்பாங்க. முந்தாநாள்தானே அவர் சிங்கப்பூர்லே இருந்தே வந்தாரு. ஒரு நாள்கூட அவங்க போட்டிருக்க மாட்டாங்க பன்னீரு."

"இல்லைம்மா! ஒரு நாள் அவங்க போட்டிருந்தாலும் அதைப் பயன்படுத்தியதாதான் அர்த்தம். என் மனசுக்குப் பிடிக்கலை... விட்டுடு. தேவைப்படறப்ப நம்ம நாட்லயே செயின் வாங்கித் தர்றேன். காப்பி தர்றியா எனக்கு?" என்றான்.

"ஆனாலும் இவ்வளவு சுத்தம் பார்க்கக் கூடாதுப்பா" என்று சலித்துக்கொண்டு, சமையல் அறைக்குள் சென்றாள் கோமதி.





# மண் பக்தி

★ சத்ரபதி சிவாஜி உயிர் விடும்போது, வெறும் தரையில் படுத்துக்கொண்டார். மண் மீதே உயிர்விட விரும்பினார்.

★ இறைச்சியைவிட இறைச்சியில் 'சூப்' தயாரித்து பருகுவது நல்லது.

★ கனிந்த வாழைப்பழத்தில் சீரகப் பொடி தூவி சாப்பிட்டால், மூல நோய் தொல்லை குறையும்.

★ குடல்புண் (அல்சர்) உள்ளவர்கள் முட்டைகோஸை நறுக்கி சிறிது தண்ணீர்விட்டு அரைத்துச் சாறு எடுத்து காலை– மாலை குடித்து வந்தால் விரைவில் குணம் கிடைக்கும்.

– எம்.எஸ். மயில், சாத்தான்குளம்.



# ஆந்தை

★ மனிதனைவிட, ஆந்தையின் பார்வைத் திறன் 82 மடங்கு அதிகம்.

★ சூரியனுக்கும், பூமிக்கும் உள்ள தூரம் 150 லட்சம் கிலோ மீட்டர்.

– பாலு, சென்னை.

# இதயம் பேசுகிறது

## சுவைத்துப் பசியாறினோம்!



மதுமதி எழுதிய 'உயிரைத் தின்று பசியாறு' நாவல், கடைசி வரை கொலையாளியை யூகிக்க முடியாமல் திப்பொறியாய் சென்றது.

**– ராஜா, தைலாம்பாளையம்.**

மிக வேகமான மர்மக் கதை. கதாநாயகியின் உறுதி, மூன்று உயிர்களை அவள் கொன்ற நவீன யுக்தி சபாஷ் போட வைத்தது.

**– ஆர். ஆர். உமா**
**செல்வமருதூர்.**

திகில், திருப்பம், சஸ்பென்ஸ், கொண்ட துப்பறியும் நாவலை 'எக்ஸ்பிரஸ்' வேகத்தில் கொண்டு சென்ற விதம் 'சூப்பர்'.

**– உள்ளகரம் பி.ஜெயராஜ்.**

பரபரப்பான சம்பவங்களுடன் விறுவிறுப்பான நாவலைப் படிக்க படிக்க சுவை குன்றாமல் இருந்தது.

**– ஆர்.ராஜகோபாலன்,**
**கொம்மடிக்கோட்டை.**

கடைசி வரை, கொலையாளி யார் என்றே கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு மர்மம் நிறைந்திருந்தது.

**– ஆர்.பிருந்தா, பெங்களூர்.**

'ஜெட்' வேகத்தில் சென்ற ஒரு 'ஹிட்' நாவல்.

**– ஆர். கல்யாணி,**
**திசையன்விளை**

தலைப்பே பயங்கரம். மாறுபட்ட திகில் நிறைந்த படைப்பை படித்து, சுவைத்து பசியாறினோம்.

**– அயன்புரம்**
**த. சத்தியநாராயணன்,**

கோலங்கள் அனைத்தும் பெண்களின் கைஜாலங்களைக் காட்டின.

**– தஞ்சை ஹேமலதா.**

துணுக்குள் சுவாரசியம்! கவிதைகளோ கலைநயம்!!

**– வி.வேல்ராஜன்,**
**விளாத்திகுளம்**

உங்கள் கருத்துகளை
அனுப்ப வேண்டிய முகவரி:
**இதயம் பேசுகிறது,**
**'ராணி முத்து',**
**சென்னை– 600 007.**



## 4

தீபக்கின் மதுக்கடை வாசலில் வேகமாக தன் சைக்கிளை நிறுத்திவிட்டு, ஆவேசமாக கடைக்குள் நுழைந்தார் அம்பிகாவின் அப்பா ஆறுமுகம்.

வாடிக்கையாளர்களிடம் 'பில்'லுக்கான பணம் வாங்கி, மேஜை டிராயரில் போட்டுக்கொண்டு இருந்தவனின் சட்டையைக் கொத்தாகப் பிடித்தார்.

"எவண்டா இங்கே தீபக்? நீதானா?" என்றார்.

அவன் நடுங்கிப் போனான்.

"அய்யோ! நான் இல்லைங்க. அவரு உள்ளே..." என்று சொல்லிக்கொண்டு இருக்கும்போதே– உள் அறையில் இருந்து வெளியே வந்த தீபக், "என்னடா இங்கே சத்தம்?" என்றான்.

"நீங்கதான் தீபக்குங்களா?"

பவ்வியமாகக் கேட்டார் ஆறுமுகம்.

"ஆமாம். என்ன வேணும்?"

"ஏண்டா ராஸ்கல்! எவ்வளவு திமிர் இருந்தா என் வீட்டுக்கு வந்து, என் பொண்ணுகிட்ட கேவலமாய் பேசுவே நீ?"

எதிர்பாராத வேகத்தில், அவன் முகத்திலேயே குத்தினார் ஆறுமுகம்.

தடுமாறியவனின் வயிற்றில் தன் முழங்காலால் மோதி அலற வைத்தார்.

வயிற்றைப் பிடித்துக்கொண்டு குனிந்தவனின் கழுத்தில் இரண்டு கைகளையும் கோர்த்து குத்தினார்.

"அய்யோ" என்று அலறிக்கொண்டு கீழே விழுந்தவனைப் புரட்டிப் போட்டு– கழுத்தில் தன் செருப்புக் காலை வைத்து லேசாக ஒரு அழுத்தம் கொடுக்க... அவன் மூச்சுத் திணறினான், கதறினான்.

கடைக்குள் இருந்த இரண்டு அடியாட்கள் வேகமாக ஓடி வந்து ஆறுமுகத்தைத் தாக்க முயன்றனர். இதையறிந்த அவர் தன் பெல்டில் இருந்து சிறிய கத்தியை எடுத்து மிரட்டினார்.

"எவனாவது கிட்டக்க வந்தீங்கன்னா உங்க முதலாளியை பொலி போட்டுடுவேன்... ஒரே குத்துதான்!" என்றதும், அவர்கள் அப்படியே நின்றார்கள்.

தீபக் பக்கம் திரும்பினார்.

"ஏண்டா நாயே! சினிமாவுல வேலை பார்க்கறவன் எல்லாம் மாமா வேலை பார்க்கறவன்னு நினைச்சியா? எங்க அப்பா யூனியன்ல சொல்லி நூறு பேரை கூட்டிட்டு வருவாருன்னு சொன்னாளாமே என் பொண்ணு.

பாவம், அவளுக்குப் புரியலை. உன்னை மாதிரி பொறுக்கியை உதைக்க நான் ஒருத்தன் போதும்னு தெரியலை. காலை இன்னும் கொஞ்சம் அழுத்தினா, நீ செத்துப் போயிருவே... அழுத்தட்டுமா?"

தீபக் தன் கண்களில் மரண பயம் காட்டினான்.

இரண்டு கைகளையும் தூக்கி இணைத்துக் கும்பிடு போட்டு உயிருக்குக் கெஞ்சினான்.

"உனக்கு சவடால் பேச்சு ஒரு கேடு. என் வீட்டுப் பக்கம் மட்டுமில்லை. என் தெருவுல உன்னைப் பார்த்தாலே தீர்த்துடுவேன், ராஸ்கல்.

ஊர்ல இருக்கிறவன் குடியெல்லாம் கெடுக்கற விஸ்கி, பிராந்தி வித்து பொழப்பு நடத்தற நீ- என் பொண்ணோட நடத்தையைப் பத்திப் பேசறியாடா?"

அவன் கழுத்தில் இருந்து காலை எடுத்து 'சக்'கென்று வயிற்றில் உதைத்துவிட்டு, சுற்றி நின்றவர்களை எல்லாம் முறைத்துப் பார்த்துவிட்டு- வேகமாக இறங்கி, தன் சைக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட்டார் ஆறுமுகம்.

**போ**லீஸ் ஜீப் வந்து நின்றபோது- ஓரத்தில் மேய்ந்துகொண்டிருந்த இரண்டு கோழிக்குஞ்சுகள் பதறி ஓடின.

குச்சியால் கதவைத் தட்டினார்- இறங்கி வந்த இன்ஸ்பெக்டர்.

கதவைத் திறந்ததும் மிரண்டாள் அம்பிகா.

"ஆறுமுகம் எங்கே?" என்றார், விரைப்பாக.

"வேலைக்குப் போயிருக்காரு."

"நீ யாரு?"

"அவரு பொண்ணு."

"எங்கே போயிருக்காரு உங்க அப்பா?"

"கே.கே.எஸ். யூனிட்டோட சினிமா படப்பிடிப்புக்காக வெளியே போயிருக்கார். என்ன விஷயமா அவரை விசாரிக்கிறீங்க?" என்றாள், பதற்றத்துடன்.

"தீபக்குன்னு ஒரு பையனை கொலை பண்ணுறதுக்கு முயற்சி பண்ணி இருக்காரு உங்க அப்பா. அந்தப் பையன் இப்ப ஆஸ்பத்திரியில



இருக்கான். புகார் கொடுத்திருக்கான்."

"அய்யோ!" என்றாள், தன் நெஞ்சைப் பிடித்துக்கொண்டு.

"எங்கே இருக்கு அந்த கே.கே.எஸ். யூனிட் அலுவலகம்?"

விலாசம் சொன்னாள்.

"சார்! எங்க அப்பா அவனை மிரட்டி எச்சரிக்கை பண்ணிட்டு வந்ததாதான் என்கிட்ட சொன்னாரு. கொலை முயற்சி பண்ணுறதுக்கெல்லாம் அவரு போகலை சார்."

"தேவைப்படறப்ப உங்களை விசாரிக்கறோம். அப்ப பதில் சொன்னாப் போதும். வர்றோம்."

இன்ஸ்பெக்டர் ஜீப்பில் புறப்பட்டுச் செல்ல, கைகளைப் பிசைந்துகொண்டு தவிப்புடன் நின்றாள் அம்பிகா.

கலங்கரை விளக்கம் அருகில் கடற்கரை ஓரமாக காதலனும், காதலியும் இரண்டு குதிரைகளில் நீரலைகள் கபடி விளையாடும் ஈர மணல் வெளியில் பாடிக்கொண்டே வரும் காட்சியைப் படமாக்குவதற்கு படப்பிடிப்புக் குழுவினர் ஒத்திகை பார்த்துக்கொண்டு இருந்தார்கள்.

"பெரிசு! அந்த 'ரிப்லெக்டரை' இப்படிக் கொண்டு வந்து வையுங்க."

உத்தரவுக் குரலுக்குக் கட்டுப்பட்டு- சில்வர் காகிதங்கள் ஒட்டப்பட்ட சூரிய ஒளியை திசை திருப்பும் 'ரிப்லெக்டரை' தன் தோளில் சுமந்து வந்து, குறிப்பிட்ட இடத்தில் வைத்து, கோணம் பார்த்தார் ஆறுமுகம், வாயில் பீடா மென்று கொண்டே.

போலீஸ் ஜீப் வந்து நின்றதும், அதில் இருந்து இறங்கிய இன்ஸ்பெக்டர் விசாரித்துக்கொண்டே ஆறுமுகம் அருகில் சென்றார்.

"அய்யா ஆறுமுகம், வர்றீங்களா ஸ்டேஷனுக்கு! நீங்க அடிச்சுப் போட்ட ஆள் அங்கே ஆஸ்பத்திரியில சாகக் கிடக்கிறான். நீங்க இங்கே சினிமா பிடிக்க வெளிச்சம் காண்பிச்சிட்டு இருக்கீங்களா?" என்று கையைப் பிடித்து முறுக்கி, முதுகுப்புறம் வைத்து- ஜீப்பை நோக்கித் தள்ளினார்.

படப்பிடிப்புக் குழுவினர் அத்தனை பேரும் சுற்றிலும் சூழ்ந்து கொண்டுவிட்டார்கள்.

"என்ன சார் இது?" என்று ஓங்கிக் குரல் எழுப்பியவன் பன்னீர்செல்வம்தான்.

"இவர் மேல கொலை முயற்சி புகார் இருக்கு. அழைச்சுட்டுப் போய் நடவடிக்கை எடுக்க வேண்டியது என் கடமை. நீங்க உங்க

வேலைகளைப் பாருங்க" என்றார், இன்ஸ்பெக்டர்.

"சார்! நடந்த சம்பவம் முழுக்க இவர் என்கிட்ட சொன்னார். அவன் இவரோட பொண்ணுகிட்ட தரக்குறைவாப் பேசியிருக்கான். அதனாலபோய் அவனை மிரட்டிட்டு வந்திருக்கார். இதுதான் நடந்தது."

"வெறுமனே மிரட்டலை... கத்தியைக் காட்டி இருக்கார். கழுத்தை மிதிச்சிருக்கார். ஆத்திரமா தாக்கி இருக்கார். உயிர் போற நிலைமையில அவன் ஆஸ்பத்திரில இருக்கானே! டாக்டர் சர்டிபிகேட்டோட அவங்க அப்பா கொண்டாந்து புகார் கொடுத்திருக்கார்."

"இல்லை. இது வேணும்னே கொடுக்கப்பட்ட புகார்" என்றார் ஆறுமுகம்.

"ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டிய அளவுக்கு நான் அடிக்கவே இல்லை."

"எல்லாத்தையும் ஸ்டேஷன்லதான் பேசணும். வாங்க, ஏறுங்க. வரலைன்னா வலுக்கட்டாயமா வண்டியில ஏத்த வேண்டியது இருக்கும். வயசுக்கு மரியாதை கொடுக்க விரும்பறேன்" என்றார், இன்ஸ்பெக்டர்.

"சரி தலைவரே, நீங்க ஏறுங்க, நான் பார்த்துக்கறேன். வக்கிலை அழைச்சிட்டு வர்றேன். எந்த ஸ்டேஷன் சார்?" என்றான் பன்னீர்செல்வம்.

"ராயப்பேட்டை" என்று சொல்லிவிட்டு ஆறுமுகத்தை ஏற்றிக்கொண்டு இன்ஸ்பெக்டர் புறப்பட்டுப் போனதும், பன்னீர்செல்வம்– கேமிராமேனிடம் சொல்லிவிட்டு உதவி டைரக்டர் ஒருவரின் 'பைக்'கை வாங்கிப் புறப்பட்டான்.

## 5

கதவைத் திறந்த அம்பிகாவைப் பார்த்ததும் கொஞ்சம் வியப்படைந்தான்.

அவளின் தந்தை ஆறுமுகம் சுமாரான நிறம், முகம் என்பதால் மகள் அம்பிகாவை இப்படிச் சிவப்பாக அசர வைக்கும் அழகாக அவன் எதிர்பார்க்கவில்லை.

"என் பேர் பன்னீர்செல்வம். ஆறுமுகம் சார் வேலை பார்க்கற



அதே யூனிட்ல 'ஆபரேடிவ்' கேமிராமேனாக வேலை செய்யறேன். அவர் பொண்ணு அம்பிகாங்கறது..."

"நான்தான், உள்ளே வாங்க சார். உங்களைப் பத்தி அப்பா நிறைய சொல்லி இருக்கார். அப்பாவை விசாரிச்சுக்கிட்டு ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர்...?"

"தெரியுங்க. அது சம்பந்தமா உங்ககிட்ட விவரம் சொல்லத்தான் நான் வந்தேன்" என்று உள்ளே உள்ள நாற்காலியில் அமர்ந்தான்.

அவளது முகம் பார்த்துப் பேசுவதில் ஒரு தடுமாற்றம் இருந்தது.

"அங்க வந்தாங்களா?" என்றாள், கைகளைக் கட்டியபடி.

"ஆமாங்க. நீங்க பதற்றப்படாதீங்க. நிதானமாச் சொல்றேன், உங்க அப்பா வயசு வித்தியாசம் பார்க்காம என்கிட்ட கொஞ்சம் நெருக்கமாய் பழகுவார். எனக்கு அப்பா இல்லை. அதனால நானும் பாசத்தோட 'தலைவரே'ன்னுதான் கூப்பிடுவேன்.

அந்த தீபக் உங்ககிட்ட வம்பு செஞ்ச விஷயத்தையும், இவர் அவன் கடைக்குப் போய் அடிச்சி மிரட்டிட்டு வந்ததையும் சொன்னார். இப்ப விசாரணைக்காக போலீஸ்காரங்க உங்க அப்பாவை ஸ்டேஷனுக்குக் கூட்டிக்கிட்டுப் போய் வெச்சிருக்காங்க."

"அய்யய்யோ!" என்றாள்.

"பதறாதீங்க. நான் உடனே ஒரு வக்கிலை அழைச்சுக்கிட்டு ஸ்டேஷனுக்குப் போனேன். நாளைக்கு காலையில உங்க அப்பாவை வீட்டுக்கு கூட்டிக்கிட்டு வந்துடலாம்."

"நாளைக்குக் காலையிலதானா?"

"ஆமாங்க. அந்த இன்ஸ்பெக்டருக்கு தீபக் தெரிஞ்சவன் போலிருக்கு. அதனால பிடிவாதம் பிடிக்கிறார். காலையில கோர்ட்ல நம்ம வக்கீல் ஜாமீன் வாங்கினதும், அழைச்சுட்டு வந்துடலாம்.

பொது இடத்துல, நிறைய பேர் பார்க்கறப்ப உங்க அப்பா கத்தியைக் காட்டி மிரட்டிட்டாரு. அது பெரிய தப்பு. இவரு தனியாய் போயிருக்க வேண்டியதில்லை. போறதுக்கு முன்னாடி என்கிட்ட சொல்லி இருந்தா... நான் என்னோட நண்பனோடு போய் அவனை நைசாப் பேசி தனியா அழைச்சுட்டுப் போய் கணக்கெடுத்திருப்பேன். நடந்ததை அவன் வெளியிலயும் சொல்ல முடியாது. உங்க அப்பா ஆத்திரத்தில அவசரப்பட்டுட்டாரு."

அவள் சற்று நேரம் அமைதியாக இருந்தாள்.

"நீங்க கவலைப்பட வேணாம். பக்கத்தில் உங்களுக்குப் பழக்கம் உள்ள பெண்கள் யாரையாச்சும் கூப்பிட்டு துணையாய்ப் படுக்கச்

சொல்லுங்க."

அவன் கண்களில் ததும்பிய கண்ணீரை மறைக்க முடியாமல், "எல்லாம் என்னாலதான்" என்றாள், குரல் கம்ம...

"அய்யோ! நீங்க என்னங்க செஞ்சீங்க... பாவம்!"

"நான் அப்பாகிட்ட சொல்லப் போய்தானே அவர் இப்படி ஆத்திரமான காரியம் செஞ்சுட்டார்."

"ஓரளவு சமாளிச்சுப் பார்த்து முடியாத பட்சத்திலதானே உங்க அப்பாகிட்ட சொன்னீங்க? விடுங்க. இது ஒண்ணும் பெரிய விஷயமில்லை."

"நாளைக்கு ஜாமீன்ல கூட்டிக்கிட்டு வந்துட்டாலும், வழக்கு நடக்குமா?"

"வக்கீலை கேட்டுக்கலாம். வழக்கு நடக்காம இருக்க என்ன செய்யணும்னு விசாரிச்சுக்கலாம். அந்தத் தீபக் தன்னோட புகாரை வாபஸ் வாங்கிட்டாப் போதும்னு சொன்னாருன்னா, அவனைப் பார்த்து புகாரை வாபஸ் வாங்க வைக்க வேண்டியது என் பொறுப்பு. நீங்க தைரியமா இருங்க. அப்ப நான் புறப்படட்டுமா...?" என்று எழுந்துகொண்டான்.

"உக்காருங்க சார். முதன் முதலா வீட்டுக்கு வந்திருக்கீங்க. ஒரு காப்பியாவது குடிச்சிட்டுப் போங்க. பதற்றத்தில் எனக்கு எதுவும் தோணலை."

"பரவாயில்லை. இன்னொரு நாளைக்கு..." என்று அவன் சொல்லி முடிப்பதற்குள்–

அவள், "பிளீஸ்... உக்காருங்க" என்று சமையல் அறைக்குள் விரைந்தாள்.

வேறு வழி இல்லாமல் மறுபடி அமர்ந்த பன்னீர் செல்வம், அந்த வீட்டின் சுத்தத்தை ரசித்தான்.

ஒரு குப்பை இல்லை. சுவரில் ஒரு கறை கிடையாது. காலுக்குக் கீழே மண் நறநறக்கவில்லை. கூந்தல் உதிரிகள் காற்றில் அலையவில்லை.

ஒவ்வொரு பொருளிலும் ஒரு நேர்த்தியும், அழகுணர்ச்சியும் வெளிப்பட்டது. ஒரு சின்ன வாடகை வீட்டை இதைவிட அழகாக யாரும் வைத்துக்கொள்ள முடியாது.

காப்பி கலக்கும் ஓசை எதுவும் இங்கே கேட்காமலேயே அவள் ஒரு சின்ன 'பிளாஸ்டிக் டிரே'யில் தம்ளரை வைத்துக்கொண்டு வந்து– பவ்வியமாக விமானப் பணிப்பெண்ணின் விருந்தோம்பல் பாணி புன்னகையோடு நீட்டிய விதம் பாங்காய் இருந்தது.



அவளின் சிவப்பு தளிர் விரல்களில் நகங்கள் சீராக வெட்டப்பட்டுள்ளதைப் பார்த்தான்.

பன்னீர் செல்வத்துக்கு மூன்று தினங்களுக்கு ஒரு முறை கை, கால் விரல்களில் நகம் வெட்டிக்கொண்டாக வேண்டும். யாராவது நீளமாக நகம் வளர்த்திருப்பதைப் பார்த்தாலே கடுமையாக கோபம் வரும். அதேபோல நகத்தைக் கடித்துத் துப்புவதை பார்க்கும்போது, கன்னத்தில் அறையலாமா என்றிருக்கும்.

காப்பி தம்ளரை எடுத்துக்கொண்டான்.

மெதுவாகப் பருகத் தொடங்கினான்.

"உக்காருங்களேன்" என்றான்.

"பரவாயில்லைங்க" என்று நின்றாள்.

"டெய்லரிங் டிப்ளமோ வாங்கி இருக்கீங்களா நீங்க?"

"இல்லை சார். மும்பையில ஒரு ரெடிமேட் கம்பெனியில வேலை பார்த்தேன். அந்த அனுபவத்தில் கத்துக்கிட்டதுதான்."

"பெண்களுக்கு 'மாடர்ன் டிரஸ்' எல்லாம் கூட தைப்பீங்க இல்லையா?"

"தைப்பேன். நானே புதுசு புதுசா நிறைய 'டிசைன்ஸ்' உருவாக்கி வெச்சிருக்கேன். ஆனா, இந்த ஏரியாவில் என்கிட்ட 'மாடர்ன் டிரெஸ்' தைக்க யாரும் வர்றதில்லை. எல்லாரும் ஜாக்கெட் அல்லது குழந்தைங்க கவுன் தைக்கத்தான் கொடுக்கறாங்க."

பேசும்போது அவளது உதடுகளின் அசைவில் ஒரு மென்மையான வசீகரம் இருந்தது.

ஒற்றைப் பின்னலை முன்புறம் போட்டிருந்ததில், அவள் முகம் இன்னும் அழகாய்த் தெரிந்தது.

"டிசைன் பண்ணி வச்சிருக்கீங்கன்னா எப்படி? படம் மாதிரி வரைஞ்சி வெச்சிருக்கீங்களா?"

"இல்லை சார். 'வேஸ்ட்' துணிகள்ல சின்ன அளவுல என் 'டிசைன்'படி துணிகள் தைத்து 'ஆல்பம்' மாதிரியே தயாரிச்சி வெச்சிருக்கேன். உங்களுக்கு நேரம் இருந்தா காமிக்கறேன்.

"பார்க்கறேன், காமிங்க" என்று– குடித்து முடித்த காலி தம்ளரை 'டீப்பாய்' மேல் வைத்துவிட்டு– கைக்குட்டை எடுத்து உதடுகளை ஒற்றிக்கொண்டான்.

அம்பிகா தான் தயாரித்து வைத்திருந்த அலங்கார உடைகள் ஆல்பத்தை எடுத்து வந்து காட்டினாள்.

வாங்கிப் புரட்டினான்.

ஒவ்வொரு பக்கமும் ஒரு குட்டி கடிதார், மிடி, பிராக், காக்ராசோளி என்று உடைகள் 'போட்டோ' போல செருகி வைக்கப்பட்டு இருந்தன.

அவற்றுக்கு அவனே பெயர் சூட்டி, எழுதி வைத்திருந்தான்.

மேலும் புரட்டினான்.

"பியூட்டிபுல் மினியேச்சர்ஸ்" என்றான்.

"அப்படின்னா?" என்றாள், புரியாமல்.

"ஸாரி! எங்க சினிமா பாஷையில சொல்லிட்டேன். ஒரு பெரிய அணை உடையற மாதிரி, கப்பல் தீப்பிடிக்கிற மாதிரி எல்லாம் 'சீன்ஸ்' எடுக்கறப்ப- அதே மாதிரி சின்ன அளவுல ஆர்ட் டைரக்டரை விட்டு 'செட்'போடச் சொல்வோம். இதை 'மினியேச்சர் செட்'டுன்னு சொல்வோம்.

அந்த மாதிரி இது எல்லாம் 'மினியேச்சர் டிரெஸ்'னு சொன்னேன். ரொம்ப அற்புதமா இருக்குங்க. ஒரு காரணமா கேக்கறேன். இதை நான் எடுத்துட்டுப் போகட்டுமா? ரெண்டு நாள்ல உங்ககிட்ட பத்திரமா திருப்பிக் கொடுத்துடறேன்."

"சரிங்க" என்றாள்.

பின்னர் சிறிது தயக்கத்துடன் ஏதோ சொல்ல வந்தாள்.

"என்னங்க?" என்றான்.

"வக்கீலுக்குக் கொடுக்கறதுக்குப் பணம்?"

"அதெல்லாம் நான் பார்த்துக்கறேங்க."

"இல்லை, என்கிட்ட ரெண்டாயிரம் ரூபா இருக்கு... தர்றேனே?"

"பரவாயில்லைங்க. தெரிஞ்ச வக்கீல்தான். இதுவரைக்கும் காசு எதுவும் கேக்கலை. நாளைக்கு ஜாமீன்ல எடுத்ததும் எவ்வளவுன்னு கேட்டு நான் 'செட்டில்' பண்ணிடறேன். தேவைப்பட்டா உங்ககிட்ட வாங்கிக்கறேன்" என்று- அந்த ஆல்பத்தை ஒரு பழைய காகிதம் போட்டுச் சுற்றி எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

## 6

**ப**ன்னீர்செல்வமும், வெங்கடேசனும் போய்ச் சேர்ந்தபோது எம்.எல்.ஏ. மலையப்பன் அவரைப் பார்க்க வந்திருந்த சில தொகுதிப் பிரமுகர்களுடன் பேசிக்கொண்டு இருந்தார்.



வெங்கடேசனைப் பார்த்ததும், "வாப்பா எப்படி இருக்கே?" என்றார்.

"நல்லா இருக்கேன் சித்தப்பா."

"அது யாரு?"

"என்னோட நண்பர்... பன்னீர்செல்வம்னு பேரு.

"வணக்கம் சார்" என்று கைகூப்பினான் பன்னீர்.

"வணக்கம்."

"சித்தப்பா, உங்ககிட்ட ஒரு விஷயமாய்ப் பேச வந்திருக்கோம். அவசரம் இல்லை. நீங்க பேசிட்டு வாங்க. நாங்க உள்ளே இருக்கோம். வா... பன்னீர்."

"சித்திகிட்ட சொல்லி காப்பி வாங்கிக் கொடு வெங்கடேஷ். இதோ வந்துட்டேன்" என்று மலையப்பன்- துண்டு போட்ட அந்தப் பிரமுகர்கள் பக்கம் திரும்பி, "அப்புறம் அந்த மாவட்டச் செயலாளர் என்ன பண்ணி இருக்காரு? ராத்திரியோட ராத்திரியா போஸ்டர் அடிச்சி, மண்டபம் பிடிச்சு மறுநாள் கூட்டம் அறிவிச்சிட்டார்" என்று கட்சி விவகாரம் பேசத் தொடங்க...

இவர்கள் வீட்டுக்குள் வந்தார்கள்.

பன்னீர்செல்வத்தை சோபாவில் உட்கார வைத்துவிட்டு- வெங்கடேசன் உள்ளே சென்று தன் சித்தப்பாவிடம் பேசினான். பிறகு, அவனே இரண்டு தம்ளர்களில் காப்பியோடு வந்து உட்கார்ந்துகொண்டான்.

"நீ சொன்னா உன் சித்தப்பா செய்வாரா வெங்கடேஷ்?"

"நிச்சயமா செய்வார். ஏன் கவலைப்படுறே?"

உள்ளிருந்து வெங்கடேசனின் சித்தி வந்து, பன்னீர் செல்வத்தை வரவேற்றுவிட்டு மரியாதைக்கு இரண்டு வார்த்தைகள் பேசிய பின் உள்ளே சென்றார்.

"டேய்... என்னடா சித்தின்னே! அவர் பொண்ணு மாதிரி இருக்காங்க."

"உஷ்... சத்தம் போட்டு பேசாதே! இப்பதான் நாலு வருஷம் முன்னாடி என் சித்தப்பா மூணாம் கல்யாணம் பண்ணிக்கிட்டார். இந்தக் கல்யாணத்துக்குப் பின்னணியில் பெரிய கதை இருக்கு. அப்புறமா சொல்றேன்" என்றான் வெங்கடேஷ்.

அரை மணி நேரம் கழித்து, கையில் புகையும் சிகரெட்டோடு எம்.எல். ஏ. மலையப்பன் உள்ளே வந்து அவர்கள் எதிரில் அமர்ந்தார்.

"தொகுதிக்காரங்க...! சட்டுன்னு கத்தரிச்சி விட முடியல

காப்பி வந்ததா? என்ன சமாசாரம்? எதாச்சும் காலேஜ் 'சீட்டா?' என்றார்.

"இல்லை சார்! ஆறுமுகம்னு ஒரு 'லைட்பாய்' சார். ரொம்ப தங்கமானவர். அவர் மேல பொய்யா கொலை முயற்சின்னு வழக்கு போட்டிருக்காங்க. நேத்து அவரை ஜாமீன்ல எடுத்தாச்சு. ஆனா, வழக்கு நடத்தப் போறாங்க. என்ன நடந்துச்சின்னா..." என்று தொடங்கி பன்னீர்செல்வம் விவரமாகச் சொல்லி முடித்தான்.

சிகரெட் ஊதியபடி கேட்டுக்கொண்டிருந்த அவர், "சுத்த அயோக்கியத்தனமா இருக்கே! உன்கிட்ட காசு இருந்தா, திமிர் இருந்தா விளையாட்டு பண்ணுறதுக்கு ஊர்ல பொண்ணுங்களா இல்லை? குடும்பத்துல இருக்கிற நல்ல பொண்ணுக்கிட்ட என்ன வம்பு வேண்டிக் கிடக்கு? மதுக்கடை உரிமத்தை ரத்து செய்துடுவேன்னு குண்டு போட்டா, நாய் மாதிரி ஓடி வந்துடுவான் பய! இன்ஸ்பெக்டர் யாரு?" என்றார்.

"காளியப்பன்னு பேர் படிச்சேன்."

"நல்லதாப் போச்சு, ராயப்பேட்டைதானே? எனக்குத் தெரிஞ்சவர்தான்."

மலையப்பன் தன் சட்டை பாக்கெட்டில் இருந்து ஒரு விலாச அட்டை எடுத்து- அதன் பின்னால் இவன் சொன்ன பெயர்களை மட்டும் எழுதிக்கொண்டார்.

"விடுங்க! வழக்கை ஒண்ணுமில்லாம பண்ணிடலாம். பொண்ணுகிட்ட வம்பு செஞ்சா அப்பன்காரன் உதைக்கத்தான் செய்வான். பொறுக்கிப் பயகிட்ட போதனையா செஞ்சிட்டிருக்க முடியும்? நான் பார்த்துக்கறேன். இந்தப் பயலை அந்தப் பொண்ணோட அப்பாகிட்ட வந்து மன்னிப்பும் கேட்டுட்டு வரச் சொல்றேன்."

"அதெல்லாம் வேணாம் சார். புகாரை வாபஸ் வாங்குனாலே போதும்."

"செஞ்சிடலாம்" என்ற அவர்-

சில பொது விஷயங்களைப் பேசிக்கொண்டு இருந்துவிட்டு- மணிக்கூட்டில் நேரம் பார்த்ததும், அவர்கள் எழுந்துகொண்டார்கள்.

வெளியே வந்து ஸ்கூட்டரில் பயணம் செய்தபோது- மறக்காமல் கேட்டான் பன்னீர்செல்வம், "மூணாம் கல்யாணத்துல ஏதோ கதை இருக்குன்னு சொன்னியே, என்ன?"

"சொல்றேன். நீ யார்கிட்டயும் சொல்லாதே! வேலைக்குப் போயிட்டிருந்த ஒரு பொண்ணை ராத்திரி நேரத்துல கடத்திக்கிட்டுப்



போய் ஒரு ரவுடிப் பய கற்பழிச்சுட்டான். அந்தப் பொண்ணோட அப்பா பெரிய பணக்காரர். கோர்ட்டுக்குப் போனா பொண்ணோட பேர் கெட்டுடும்னு நினைச்சார்.

அதே நேரம் அந்த ரவுடிப்பய மேல நடவடிக்கை எடுத்தாகணும்னு துடிச்சார். பொண்ணை அழைச்சுக்கிட்டு என் சித்தப்பாகிட்ட வந்து, பூரா கதையும் சொன்னார். சித்தப்பாவுக்கு கீழ்மட்டத்து ரவுடிக் கும்பல்களோடு நெருக்கமான தொடர்பு உண்டு. கற்பழிச்சவன் யாருன்னு தனிப்பட்ட முறையில சில போலீஸ் அதிகாரிகள் மூலமா கண்டுபிடிச்சி- அவன் மேல் வேற ஒரு கொலை வழக்கு ஜோடிச்சி ஆயுள் தண்டனை வாங்கிக் கொடுத்துட்டார்."

"இவ்வளவு வேலை செய்வாரா உங்க சித்தப்பா... அப்புறம்?"

"அந்தப் பொண்ணுக்கும், அவங்க அப்பாவுக்கும் மனசு திருப்தியாச்சு. வந்து நன்றி சொன்னாங்க. 'உங்களுக்கு நான் ஏதாச்சும் செய்யணும். என்ன வேணும்னு கேளுங்க'ன்னார். அப்ப, 'உங்க பொண்ணுக்கு வாழ்வு கொடுக்கறேன். அவளை எனக்கு மூணாம் தாரமா கட்டிக் கொடுத்திருங்க'ன்னு கேட்டார் இவர். அவங்களும் சம்மதிச்சாங்க. அந்தப் பொண்ணுதான் நீ பார்த்த எங்க சித்தி!"

"அந்தக் கோமடீஸ்வரருக்கு இப்ப உங்க சித்தி மட்டும்தானா?"

"ஆமாம்."

"அதான்! கோடிக்கணக்கான சொத்துக்கு ஒரே வாரிசு! அழகா வேற இருக்காங்க! கற்பில்லைன்னா பரவாயில்லைன்னு வளைச்சுப் போட்டுட்டார்."

"சரி! பணத்துக்காகவே இருக்கட்டும். கற்பிழந்த ஒரு பொண்ணுக்கு வாழ்க்கைத் தந்து குடித்தனம் பண்ணுறதுக்கு ஒரு பரந்த மனப்பான்மையும், தியாக குணமும் வேணும் பன்னீர் என்ன சொல்றே?"

"மன்னிக்கணும் வெங்கடேஷ். இந்தக் கருத்தில் எனக்கு உடன்பாடில்லை."

"ஏன்?"

ஸ்கூட்டரை ஓரமாக நிறுத்தி இறங்கிவிட்டான் பன்னீர்செல்வம்.

"இரு. பேசிட்டுப் போகலாம். இப்போ தோட்டத்துல ஒரு தட்டுல சோறு வச்சி, நீ சாப்பிட்டுகிட்டு இருக்கே. விக்கல் வருது. உள்ளே போய் தண்ணி எடுத்துட்டு வந்து பார்த்தா, ஒரு நாய் உன் தட்டுல உள்ள சாதத்தை சாப்பிட்டுகிட்டு இருக்கு. நீ வர்றதைப் பார்த்துட்டு

ஓடிடுது.

இப்ப நீ– நாய்தான் போய்டுச்சேன்னு அந்தச் சோறை தொடர்ந்து சாப்பிடுவாயா? தூக்கிக் கொட்டிடமாட்டே! அந்த மாதிரி கற்பிழந்த ஒரு பெண்ணைப் பார்க்கிறப்ப எனக்கு ஒரு அருவருப்புதான் தோணுது. இரக்கம் வரலை."

"அதெப்படி பன்னீர்? கற்பழிப்புங்கறதே ஒரு பொண்ணோட சம்மதம் இல்லாம நடத்தப்படற வெறியாட்டம்தானே? தன் சம்மதம் இல்லாம நடந்த ஒரு கொடுமையில... பாவம் அந்தப் பொண்ணு என்ன செய்யும்?"

"நீ சொல்ற நியாயத்தை ஏத்துக்கறேன். நான் சொல்றது அந்த மாதிரிப் பெண்களைப் பார்க்கிறப்ப என் மனசிலே ஏற்படற உணர்வுகளைத்தான் சொல்றேன். இரக்கப்படலாம், அனுதாபப்படலாம். வாழ்க்கையையே தூக்கிக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை."

"பல விஷயங்களில் முற்போக்கா சிந்திக்கற நீயா இப்படிப் பேசறே! சரி... என் சித்தி அழகா இருந்தாங்க, பணத்தோட இருந்தாங்க, கல்யாணம் ஆகி வாழ்க்கையில் ஒரு விதத்தில் 'செட்டில்' ஆகிட்டாங்க.

வசதி இல்லாத எத்தனையோ பெண்கள் இந்தக் கற்பழிப்புக் கொடுமைக்கு ஆளாகறாங்க! அவங்களுக்கு தியாக சிந்தனை உள்ள இளைஞர்கள் வாழ்க்கை கொடுக்கலைன்னா எப்படி? அவங்க வாழ்க்கை அப்படியே கருகிப் போகணும்னு சொல்றியா?"

சிரித்தான் பன்னீர்செல்வம்.

"கற்பழிப்புனால பாதிக்கப்பட்ட, இளம் வயசில விதவையான பெண்கள்– இவங்க மேல எல்லாம் எனக்கு இரக்கம், பரிதாபம் உண்டு. ஆனா, தீவிரமா இல்லை. அந்த மாதிரி பாதிப்பு அடைஞ்ச ஒரு பொண்ணை கல்யாணம் பண்ணிக்கச் சொன்னா நான் சம்மதிக்கமாட்டேன். ஏன்னா... நான் தியாகி இல்லை. தியாகம் செஞ்சி வாழ்க்கை கொடுத்தாகணும்னு எனக்கு அவசியமும் இல்லை.

எனக்குன்னு சில விருப்பங்கள், கனவுகள், எதிர்பார்ப்புகள் இருக்கு. என் உணர்வுகளைப் பொறுத்த வரைக்கும் அப்படிப்பட்ட பெண்களை நான் அனுதாபத்தோடு பார்க்கிறதைவிட, கொஞ்சம் அருவருப்போடதான் பார்க்கறேன். அவங்களுக்கு யாரும் வாழ்க்கை கொடுக்கவே கூடாதுன்னு நான் சொல்லவே இல்லை" என்றான் பன்னீர்செல்வம்.

"உன்னோட இந்த உணர்வுக்கு என்ன காரணம்னு நான் சொல்றேன்."

"என்ன?"



"சின்ன வயசிலேருந்து நீ ரொம்ப சுத்தம் பார்க்கிறவன். சாப்பாட்டிலே தலைமுடி கிடந்தா, அதை எடுத்துப்போட்டுட்டு சாப்பிடமாட்டே. என்ன ஜுரம் அடிச்சாலும் தினமும் குளிச்சிடுவே. அதனால உன் மனசில இந்தக் கற்புங்கிற விஷயம் ஒரு சுத்தமான விஷயமா பதிஞ்சிருக்கு. அது தவறிப் போறப்ப... அசுத்தத்தைப் பார்க்கிற பார்வை உனக்கு வந்துடுது."

"ஆமா, அப்படிக்கூட இருக்கலாம்" என்று பன்னீர்செல்வம் மறுபடி ஸ்கூட்டரை 'ஸ்டார்ட்' செய்தான்.

# 7

தண்ணீர் வாங்கிக் குடித்துவிட்டு தம்ளரை ஓசை எழுப்பாமல் வைத்த பன்னீர்செல்வம், "நான் வேணும்னா உங்க அப்பாவை நாளைக்குப் பார்த்துக்கறேனே..." என்றான்.

"இல்லைங்க! இப்ப வந்துடுவார். காய்கறியும், கொஞ்சம், மளிகைச் சாமானும் தேவைப்பட்டது. அவர் போய் அரை மணி நேரமாச்சு..."– என்று சொல்லியவாறே அம்பிகா வாசலுக்குப் போய் தெருவை எட்டிப் பார்த்துவிட்டுத் திரும்பினாள்.

நீலநிறப் புடவையை நேர்த்தியாகக் கட்டி இருந்தாள்.

"நேத்து அந்த தீபக் வந்து புகாரை வாபஸ் வாங்கிட்டதாச் சொல்லிட்டு எங்க அப்பாகிட்ட மன்னிப்பும் கேட்டுட்டுப் போனதை என்னால நம்பவே முடியலைங்க. எவ்வளவு திமிராப் பேசினவன்... 'வர்றேன் சிஸ்டர்'னு பவ்வியமா சொல்லிட்டுப் போனான்."

"ஒவ்வொருத்தனுக்கும் ஒரு 'கண்ட்ரோல் சுவிட்ச்' இருக்குங்க. அதைக் கண்டுபிடிச்சி அணைச்சுட்டா, ஆட்டமெல்லாம் அடங்கிடும். இருங்க, நீங்க கொடுத்த 'மாடல் டிரெஸ்' ஆல்பத்தை வண்டியில வெச்சிருக்கேன். எடுத்துட்டு வர்றேன்."

பன்னீர்செல்வம் எடுத்து வந்து அவளிடம் கொடுத்தான்.

"ஏங்க, இதுல இருக்கிற 'டிசைன்'ல ஒரு துணி தச்சிக் கொடுத்தா உங்களுக்கு எல்லா செலவும் போக எவ்வளவு கிடைக்கும்?"

"நூற்றைம்பது ரூபா கிடைக்கும்" என்றாள்.

"ஒரு துணி தைக்க எத்தனை நாளாகும்?"

"இது ஒண்ணுதான் வேலைன்னா, ஒரு நாள்ல ரெண்டு தைக்கலாம்.





ஏன் இதெல்லாம் கேக்கறீங்க?"

"பதினைஞ்சு நாள்ல நாப்பது உடை தைக்கனும். உதவியாளர்கள் வெச்சுகிட்டு தச்சித் தர்றீங்களா?"

"நாப்பது டிரெஸ்ஸா?" என்று விழிகளை விரித்தாள்.

"ஆமாம். இந்த ஆல்பத்தை பிரபல நடிகைகிட்ட காமிச்சேன். ரொம்பப் பாராட்டினாங்க. அடுத்த படம் ஒண்ணு தொடங்குது. அதில் ஆடை வடிவமைப்பாளரா உங்களை ஒப்பந்தம் செய்ய முயற்சி பண்ணுறேன்னு சொன்னாங்க. நாளைக்கு என்னோடு வந்தீங்கன்னா அவங்ககிட்ட அழைச்சுட்டுப் போறேன். இந்த ஆல்பத்தை எடுத்துக்கிட்டு வாங்க. 'கலர் செலக்ஷன்' பற்றி அவங்களோட பேசிக்குங்க.

தயாரிப்பாளரிடம் இருந்து ஜாக்கெட் துணிக்கு முன்பணம் வாங்கித் தருவாங்க. கம்பெனி காரிலேயே துணிக் கடைக்குப் போய் துணி எடுத்துட்டு வரலாம். இந்த ஒரு ஆர்டரை பிரமாதமா செஞ்சுட்டா, அப்புறம் நீங்க பத்து டெய்லரை போட்டுகிட்டு 'டிசைன்' மட்டும் செஞ்சி பிரமாதமான ஆடை வடிவமைப்பாளரா உருவாயிடலாம். என்ன சொல்றீங்க?"

அவள் திகைப்பில் இருந்து விடுபடாமல் நின்றாள்.

இவர்கள் போனபோது அந்த பிரபல நடிகை ஒரு பத்திரிகைக்கு விரிவான பேட்டி ஒன்று கொடுத்துக்கொண்டு இருப்பதாகவும், அது முடிய ஒரு மணி நேரத்துக்கு மேலாகும் என்றும் உதவியாளர் சொன்னார்.

வரவேற்பு அறையின் ஷோபாக்களில் அமர்ந்து அங்கே வைக்கப்பட்டிருந்த பரிசுப் பொருட்களை கண்கொட்டாமல் பார்த்தனர். சில நிமிடங்களுக்குப் பிறகு அதில் அலுப்பு வந்துவிட்டது.

"வாங்க அம்பிகா, பக்கத்தில ஒரு ஓட்டல் இருக்கு. அங்க காப்பி நல்லா இருக்கும். கீரை வடை சூடா போட்டுத் தருவாங்க. பிரமாதமா இருக்கும். போயிட்டு வரலாம்" என்றான் பன்னீர் செல்வம்.

அவள் தன் கைப்பையையும், அந்த ஆல்பம் கொண்ட பையையும் எடுத்துக்கொண்டு எழ- பையை அவன் வற்புறுத்தி வாங்கிக்கொண்டான்.

சிறிது தூரம் நடந்து , அந்த ஓட்டலின் குளிர் அறைக்குள் நுழைந்து அமர்ந்தனர்.

கீரை வடைக்கு 'ஆர்டர்' செய்ததும் ஒரு பெரிய அமைதி உருவானது.

இருவரும் ஒருவருக்கொருவர் தெரிந்துவிடக்கூடாது என்று கருதி மற்றவரைப் பார்ப்பதும், முகத்தை லாவகமாக திருப்பிக் கொள்வதுமாக இருந்தனர்.

"நீங்க நிறைய சினிமா பார்ப்பீங்களா அம்பிகா?" என்று கேட்டு அந்த நிசப்த ஐஸ் கட்டியை உருக வைத்தான் பன்னீர்.

"அவ்வளவா இல்லை. ரொம்ப நல்ல படமா இருந்தா 'பிரீவியூ' தியேட்டருக்கு 'டெக்னீஷியன்ஸ் ஷோ'வுக்கு அப்பா அழைச்சுட்டுப் போவார்."

"எனக்கு ரொம்ப ஆர்வம் உண்டுங்க. சினிமாவையே கலக்கற புரட்சி எல்லாம் செய்துடுவேன்னு தோள் தட்ட நான் தயாரில்லை. ஆனா, நல்ல படம் என்னால தர முடியும்னு நம்பிக்கை இருக்கு. 'ஸ்கிரிப்ட்' பேசிக்கிட்டு இருக்கேன்."

"அப்பா சொன்னார். என்ன மாதிரி படம் பண்ணப்போறீங்க?"

"வித்தியாசமான கதைகள் நாலஞ்சி நினைச்சி வெச்சிருக்கேன். ஆனா, பாதுகாப்பா முதல்ல காதல் கதைகளை எடுத்துக்கலாம்னு முடிவு செஞ்சிருக்கேன். அடுத்த நூற்றாண்டுலயும் காதல் மட்டும் சாகாம நிக்கும்னு நினைக்கிறேன். குருடன், யானையைப் பார்த்த மாதிரி ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு கோணம் இருக்கு இந்தக் காதல்ல. அதைப் பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்க?"

சட்டென்று அவள் அமைதியானாள்.

தன் நெற்றியோரம் வடிந்த வியர்வையின் பிசுபிசுப்பைத் துடைத்துக்கொண்டாள்.

ஸீரை வடை வந்து வைக்கப்பட, மவுனமாக அதை சிறிய கரண்டியால் துண்டு போடத் தொடங்கினாள்.

"என்னங்க.... நான் எதாச்சும் சங்கடப்படுத்திட்டேனா?"

"அதெல்லாம் இல்லை."

"எதார்த்தமா பேச ஆரம்பிச்சதால கேட்டேன். உங்க அபிப்ராயம் எதுவா இருந்தாலும் சொல்லலாம்."

"காதல், ரெண்டு மனசு சம்பந்தப்பட்டது. அதே சமயம் இதுல தகுதின்னு ஒண்ணும் சம்பந்தப்படுதுங்க. எல்லாருக்கும் அந்தத் தகுதி அமையறதில்லை"– என்றபோது அவள் கண்கள் லேசாக கலங்கியது போலிருந்தது.

இந்தப் பேச்சைத் தொடர பன்னீர்செல்வம் விரும்பாததால் சாப்பிடுவதில் கவனத்தைச் செலுத்தினான்.

காப்பி குடித்தபின் 'சர்வர்' கொண்டுவந்து தந்த 'பில்'லை அம்பிகா



கேட்க- மறுத்த பன்னீர், தான்தான் அழைத்து வந்ததாகச் சொல்லி தன் சட்டைப் பையில் இருந்து பணத்தை எடுத்து தட்டில் வைத்தான்.

வெளியே வந்தபோது- முகமெல்லாம் கோரமாக, உடம்பு முழுவதும் அழுக்காக இருந்த அசிங்கமான பிச்சைக்காரன் ஒருவன்- வழியை மறித்தபடி, "அய்யா... தர்மப் பிரபு" என்று ஒரு டப்பாவைக் குலுக்கி நீட்டினான்.

"நகருய்யா முதல்ல!" என்று முகம் சிவக்கக் கத்தியதும், அவன் விலகி முணுமுணுத்தான்.

"வந்துட்டானுங்க ராஸ்கல்!" என்று பன்னீர் திட்டிவிட்டு, சற்று முன்னால் நடந்த அம்பிகாவோடு சேர்ந்துகொண்டான்.

அவன் விலகி நடந்ததும் தைரியம் பெற்ற அந்தப் பிச்சைக்காரன், அவனைக் கைநீட்டி ஏதோ வார்த்தைகளால் திட்டத் தொடங்கினான்.

"சில்லறைக் காக இருந்தா போட்டிருக்கலாமே! கன்னா பின்னான்னு பேசறான் பாருங்க" என்றாள் அம்பிகா.

"பைசா இல்லை... பணம்கூட தரலாம். அவனைப் பார்த்தீங்கள்ல. பார்த்தா இரக்கம் வருதா... எரிச்சல் வருதா? கோவில் வாசல்ல குளிச்சுட்டு சுத்தமான துணி கட்டி நெத்தியில விபூதியோட எத்தனை பிச்சைக்காரங்க இருக்காங்க. அவங்களுக்குப் போடுவேன். தலையைப் பாருங்க. சிக்கும் சிடுக்குமா... வாந்தி வரலை? எத்தனை முட்டாளா இருந்தாலும் பொறுத்துப்பேன். சுத்தமா இல்லைன்னா பொறுக்கவே மாட்டேன்" என்று படபடத்தான்.

மறுபடி நடிகை வீட்டுக்குச் சென்றபோது அங்கு அவர் இல்லை.

"மேடம் இப்பத்தான் புறப்பட்டுப் போனாங்க. உங்களை எஸ்.பி.பி. 'டப்பிங்' தியேட்டருக்கு வரச் சொன்னாங்க" என்றார் உதவியாளர்.

இதையடுத்து அவர்கள் இருவரும் வெளியே வந்து, ஆட்டோ பிடித்து அங்கே புறப்பட்டார்கள்.

## 8

அலைகள் ஆர்ப்பாட்டமாக வந்து கரையில் மோதிச் சிதறிக்கொண்டிருந்தன. மீன்பிடி படகுகள் கரைநோக்கி திரும்பின. வானம் நீல நிறத்தை லேசாக இழந்திருந்தது.

சற்றுத்தள்ளி படப்பிடிப்புக் குழு, வந்துசேர வேண்டிய கதாநாயகனுக்காகக் காத்திருக்க...

அவர்களைவிட்டு தூரமாக விலகி வந்து மணலில் அமர்ந்திருந்தார்கள் ஆறுமுகமும், பன்னீர்செல்வமும்.

"என்னங்க தம்பி, ஏதோ பேசணும்னு சொன்னீங்க. அமைதியாக இருக்கீங்க? என்ன விஷயம்?" என்றார் ஆறுமுகம்.

"சொல்லத் தயக்கமா இருக்குது தலைவரே!"

"தம்பி, நீங்க என் குடும்பத்தில் ஒருத்தர் மாதிரி. என் மேல உரிமையோட அன்பு காட்டற உங்களுக்கு என்கிட்ட எதைப்பத்திப் பேசவும் தயக்கம் வேண்டியதில்லை. சொல்லுங்க."

அவர் முகத்தை தீர்க்கமாகப் பார்த்தான் பன்னீர்செல்வம்.

"சுருக்கமா சொல்லணும்னா நான் உங்களுக்கு மருமகனாகணும்னு ஆசைப்படறேன் தலைவரே. எனக்கு அம்பிகாவை ரொம்பவும் பிடிச்சிருக்கு. உங்க சம்மதத்தோட, உங்க பொண்ணுக்கும் விருப்பம் இருந்தா நான் கல்யாணம் செய்துக்க ஆவலா இருக்கறேன்."

முகத்தில் எந்தவித உணர்ச்சிகளையும் காட்டாமல் அமைதியாக இருந்தார் அவர்.

"உங்க புள்ளை மாதிரி பழகிட்டு திடீர்னு இப்படிச் சொன்னதில் அதிர்ச்சியா இருக்கா தலைவரே?"

"இல்லை, வந்து... நான்..."

"இதோ பாருங்க! தகுதி, அந்தஸ்துன்னு எதையும் சொல்ல வேணாம். என்னைப் பற்றிதான் உங்களுக்குத் தெரியுமே? பணம், சீர்னு எதையும் நான் உங்ககிட்டே இருந்து எதிர்பார்க்க மாட்டேன். சினிமாவுல ஏதாச்சும் சாதிச்சுட்டுதான் கல்யாணம் பண்ணிக்கணும்னு முந்தி பிடிவாதமா இருந்தேன்.

ஆனா, அம்மா என்னை அடிக்கடி அவசரப்படுத்திக்கிட்டே இருக்காங்க. இப்ப அம்பிகாவைப் பார்த்ததுமே எனக்குப் பிடிச்சிப் போச்சு. அவங்களோட திறமை, அடக்கம், பேச்சு, பண்பு எல்லாமே எனக்குள்ள ஒரு ஈர்ப்பை ஏற்படுத்திடுச்சு.

அம்பிகா என் மனைவியா வந்தா, என்னோட லட்சியத்துக்கு பக்கபலமா இருப்பாங்கன்னு நினைக்கிறேன். ஒரு மனுஷனுக்கு அவனோட மனசை அறிஞ்ச ஒரு மனைவி அமையறதுதான் பெரிய அதிர்ஷ்டமா இருக்க முடியும். அம்பிகா எனக்குக் கிடைச்சா நிச்சயமா நானும் ஒரு அதிர்ஷ்டசாலி" என்றான், நிதானமாக.

"தம்பி, எனக்கு என்ன சொல்றதுன்னே புரியலை. திடீர்னு



நீங்க..."

"நான் சொன்னதெல்லாம் உங்க மனசுல பதிஞ்சி, நீங்க ஒரு முடிவுக்கு வர்றதுக்கு கால அவகாசம் வேணும். ரெண்டாவது, இதுல அம்பிகாவோட விருப்பமும் முக்கியம். கேட்டுப் பாருங்க. ஆலோசனை பண்ணி பொறுமையா எனக்கு முடிவு சொன்னாப் போதும். ஹீரோ வந்தாச்சு. வாங்க, போலாம்" என்று முதலில் எழுந்துகொண்டு, அவருக்குக் கைகொடுத்து எழுப்பினான் பன்னீர்செல்வம்.

தழும்பு நிலா, விண்ணில் தவழ்ந்துகொண்டிருந்தது.

சாப்பாடு முடித்து வீட்டின் பின்புறம் வந்து கைகழுவிக்கொண்ட ஆறுமுகம் உள்ளே வந்து, கொடியில் கிடந்த டவலை எடுத்துத் துடைத்துக்கொண்டார்.

அம்பிகா ரெண்டு தட்டுகளையும் கழுவி எடுத்து வைத்துவிட்டு, சமையலறை மேடையை சுத்தம் செய்யத் தொடங்கினாள்.

தான் கழற்றிப் போட்ட அரைக்கால் டவுசரின் பையில் இருந்து ஒரு பீடா பாக்கெட் எடுத்துப் பிரித்து, தன் வாயில் போட்டுக்கொண்டார் ஆறுமுகம்.

அதை மென்றபடியே... பாய் விரித்து, தலையணை போட்டுக்கொண்டு அமர்ந்தார்.

சமையலறை வேலைகளை முடித்துவிட்டு கைகளைத் துடைத்தவாறே வந்த அம்பிகா, "தண்ணி எதுவும் வேணுமாப்பா?" என்றாள்.

"வேணாம்மா. இப்படி வந்து உக்காரு" என்றார்.

"என்னப்பா?" என்று அவர் அருகில் வந்து அமர்ந்தாள் மகள்.

"நம்ம பன்னீர்செல்வம் பத்தி என்ன நினைக்கிறேம்மா?"

"ரொம்ப நல்லவருப்பா. மத்தவங்களுக்கு பிரச்சினை வந்தா நமக்கு என்னன்னு ஒதுங்காம ஈடுபாட்டோட யாருக்கும் உதவி செய்யறவங்க ரொம்பவே அபூர்வம்ப்பா. அப்படிப்பட்ட ஒரு அபூர்வ மனிதர்தான் அவர்."

"அவரைக் கல்யாணம் பண்ணிக்கிறியாம்மா?"

"அப்பா!" என்றாள், அதிர்ச்சியுடன்.

"ஆமாம்மா. அவர் உன் மேல ஆசைப்படறார். என்கிட்ட முறையா பொண்ணு கேட்டார். உங்க பொண்ணையும் கலந்துகிட்டு முடிவு சொல்லுங்கன்னார். அதான் கேக்கறேன்... என்ன சொல்றே?"

"அப்பா! நீங்க என்ன பேசுறீங்க? என் நிலமையைப் புரிஞ்சுதான் பேசுறீங்களா? எனக்கு என்னப்பா தகுதி இருக்கு?"

"அம்பிகா, நான் எல்லாத்தையும் யோசிச்சுட்டுதான் கேக்கறேன். உனக்கு அவரைப் பிடிச்சிருக்கா, இல்லையா? அதை மட்டும் சொல்லு!"

"அப்பா... என்ன மறுபடி, மறுபடி அதையே கேக்கறீங்க? நான் தாலி அறுத்தவப்பா! மறந்துட்டுப் பேசுறீங்களா?" என்றாள் விழிகளில் கண்ணீர் பொங்க.

"இல்லைம்மா, மறக்கற விஷயமா அது? மும்பையில நீ அந்த பொறுக்கியோட வாழ்ந்தது ஒரு மாசம்கூட இல்லை அம்பிகா. நீ நடத்தினது இல்லற வாழ்க்கை இல்லை. ஜெயில் வாழ்க்கை. ஜெயிலுக்குப் போயிட்டு வந்தவங்க கல்யாணம் பண்ணிக்கக் கூடாதா? அந்த வரதராஜனால நீ ஒரு நிமிஷமாவது சந்தோஷப்பட்டு இருக்கியா சொல்லு. சரியா விசாரிக்காம நல்லவன்னு நம்பி அவனுக்கு உன்னைக் கொடுத்தேன் பாரு... என்னைச் சொல்லணும்.

'அப்பா நமக்கு நல்ல புருஷனைத்தான் தேடிக்கொடுப்பார்'னு ஒரு நம்பிக்கையோடதானே அவனுக்கு கழுத்தை நீட்டினே? ஊருக்கு ஒரு பெண் வெச்சிருந்ததும், விக்கலுக்கு விஸ்கி குடிக்கிறதும்தான் அவன் நிஜ முகம்னு தெரிஞ்சதுக்கு அப்புறம் நீ வாங்கின அடி, உதைக்கெல்லாம் கணக்கு உண்டா அம்பிகா.

ஒரே மாசம்! லாரி விபத்தில அவன் செத்துப்போனப்ப நீ அழுததெல்லாம் நிஜம்னு உன் மனசைத் தொட்டுச் சொல்லு பார்க்கலாம். விதவையானதுதான் உனக்கு கிடைச்ச பெரிய விடுதலைன்னு நான் சந்தோஷப்பட்டேன்ம்மா. காவியமா வாழ்ந்த புருஷன் அல்ப ஆயுசுல போயிருந்தா, அவன் நினைப்பிலேயே காலம்பூரா வாழ்ந்துடலாம். உன் பழைய புருஷனை நினைச்சிப் பார்த்து சந்தோஷப்படறதுக்கு ஒரு சம்பவமாவது நடந்திருக்கா... சொல்லு.

இதோ பாரும்மா... மனசை மாற்றத்துக்காக மட்டும் உன்னை மும்பையிலே இருந்து சென்னைக்கு கூட்டிட்டு வரலை. ஊர், உலகம் துருவித் துருவி விசாரிக்கும். ஒவ்வொருத்தருக்கும் ஒரு சோகக் கதையை சொல்லிட்டு இருக்கணும். இங்க வந்து, உன்னைப் பொட்டு வெச்சுக்கோ, பூ வெச்சுக்கோன்னு சமாதானப்படுத்தி சம்மதிக்க வச்சதுக்கு காரணம் ஊர் வாய்க்கு பயந்து மட்டும் இல்லைம்மா..."

அம்பிகா அவரை உணர்ச்சி இல்லாமல் பார்த்தாள்.

"கொஞ்ச நாள்ல உன் மனசுல உள்ள ரணம் எல்லாம் ஆறணும். உனக்கு ஒரு நல்ல வாழ்க்கை மறுபடி அமைச்சிக் கொடுக்கணும்னுதான் அப்படிச் செஞ்சேன். உன் வாழ்க்கை இப்படியே போயிடக்கூடாதும்மா. பன்னீர் ரொம்ப தங்கமான பையன். நீ எதுவும் எதிர்பேச்சு பேசாம



ஒத்துக்கோ. நாளைக்கே அவர்கிட்ட சம்மதம்னு சொல்லிடறேன்."

அம்பிகா அமைதியாய் தரையைப் பார்த்தாள்.

"என்னம்மா... சொல்லு."

"அப்பா! ஏற்கெனவே கல்யாணமாகி விதவையானவங்கிற காரணத்தைச் சொல்லி இந்தக் கல்யாணத்தை நான் தவிர்க்க விரும்பலை. நீங்க சொன்ன மாதிரி அது மனசுல ஒட்டாத ஒரு வாழ்க்கை. உடம்புல ஒட்டின ஈர மணல், காய்ஞ்சதும் உதிர்ந்துடற மாதிரி... இந்தக் கால ஓட்டத்துல அந்த நினைப்புகள் என்னைவிட்டு விலகியே போயிடுச்சி. இப்போ என்னை ஒரு புது மனுஷியாத்தான் நினைக்கிறேன். நான் பொய் சொல்ல விரும்பலை. எனக்கு அவரைப் பிடிச்சிருக்குப்பா. ஆனா, இந்தக் கல்யாணம் நடக்காது" என்றாள், தலையைத் தாழ்த்தியவாறே.

"ஏன்ம்மா அப்படிச் சொல்றே?"

"அவர் என்னை ஏத்துக்க மாட்டாருப்பா."

"என்ன உளர்றே நீ. அவரேதான் வந்து விருப்பத்தைச் சொன்னார்."

"அவர்கிட்ட என் கடந்த காலத்தைப் பத்திச் சொன்னீங்களா?"

"என்ன முட்டாள்தனமாய் பேசறே நீ? நானும் மறந்துட்டேன்னு சொல்றேன். நீயும் அந்த வாழ்க்கையை மறந்துட்டதா சொல்றே. யாருக்குத் தெரியும்? மும்பையில நமக்கு ஜாதி ஜனம் யாருமில்லை. நாலு தெரிஞ்ச முகங்களை வெச்சிக்கிட்டு கோவில்ல நடத்தின கல்யாணம் அது. இது புது ஊரு, புது சூழ்நிலை. எதுக்காக அதெல்லாம் சொல்லணும்?"

"அப்பா, புரிஞ்சுதான் பேசுறீங்களா? எவ்வளவு பெரிய விஷயம் இது!"

"புரிஞ்சுதான் பேசறேன். நல்லது நடக்கறதுக்காக ஒரு பொய் சொல்லலாம். நாம பொய் சொல்லலை. உண்மையை மறைக்கிறோம்... அவ்வளவுதான். அதிலேயும் பன்னீரை எனக்குத் தெரியும். நல்லவன். ஆனா, சில விஷயங்களில் பிடிவாதக்காரன்.

அந்தக் கசப்பான ஒரு கல்யாணத்தைப் பத்திச் சொன்னா நிச்சயம் உன்னைக் கல்யாணம் பண்ணிக்க தயங்குவான். ஒரு நல்ல வாய்ப்பை இழக்க நான் விரும்பலை அம்பிகா. நீ எதுவும் சொல்ல வேண்டியதில்லை. பேசாம இரு" என்றார், சற்றே கனமான குரலில்.

"அப்பா... இல்லை! இது விபரீதமான விஷயம். எனக்கு சம்மதமில்லை."

"அசடு மாதிரி பேசாதே. உனக்குப் பன்னீரைப் பிடிச்சிருக்கு. அவன் உனக்குப் புருஷனா கிடைக்கனும்னா, வாயை மூடிக்கிட்டு இரு. உன் நல்லதுக்குத்தான் சொல்றேன்."

"இல்லைப்பா. அவர்கிட்ட எல்லாத்தையும் சொல்லிடலாம். அதுக்கப்புறமும் அவர் என்னை கல்யாணம் செய்ய விருப்பப்பட்டா செய்துக்கட்டும். இல்லைன்னா இப்படியே இருந்துட்டுப் போறேன். தெய்வம்னு ஒண்ணு இருக்குப்பா. பித்தலாட்டம் தப்பு."

அவளை உற்றுப் பார்த்தார். சட்டென்று எழுந்தார்.

அவள் கையைப் பிடித்து இழுத்து வந்து, சாமிப் படத்துக்கு முன்னால் நிறுத்தினார்.

பரபரவென்று இரண்டு காகிதங்கள் எடுத்தார். ஒன்றில் விபூதி வைத்துக் கட்டினார். மற்றொன்றில் குங்குமம் வைத்துக் கட்டினார்.

"அம்பிகா, நீ சொன்ன தெய்வத்துக்கிட்டயே உத்தரவு கேட்டுடலாம். விபூதி வந்தா உண்மைகளைச் சொல்லிடலாம். குங்குமம் வந்தா, சொல்ல வேணாம். என்ன சொல்றே? சாமி சொல்ற உத்தரவுப்படி நடந்துக்கலாம். இதுக்கு நீ சம்மதிக்கிறியா?" என்றார், ஆவேசமாக.

தயக்கத்துடன் தலையசைத்தாள் அம்பிகா.

இரண்டு பொட்டலங்களையும் குலுக்கி படத்தின் முன்னால் மரப் பலகையில் போட்டார்.

"கண்ணை மூடிக்கிட்டு நீயே எடும்மா" என்றார்.

அம்பிகா தன் கண்களை மூடிக்கொண்டாள்.

நடுங்கும் விரல்களால் மெதுவாகத் துழாவி, ஒரு பொட்டலத்தை எடுத்து அவரிடம் கொடுத்தாள்.

அதை மெதுவாகப் பிரித்த ஆறுமுகம், "பாரும்மா! இதான் நம்ம தெய்வத்தோட உத்தரவு!" என்றபடி அதில் இருந்த குங்குமத்தை எடுத்து அவள் நெற்றியில் வைத்தபோது...

அம்பிகாவுக்குச் சிலிர்த்தது.

## 9

"**வ**லது காலை எடுத்து வெச்சி உள்ளே வாம்மா" என்றாள், பன்னீர் செல்வத்தின் தாய் கோமதி.

மணமக்களைத் தொடர்ந்து ஆறுமுகமும், வெங்கடேசும் வீட்டுக்குள் நுழைந்தார்கள்.

"பன்னீர், அம்பிகா கையில தீப்பெட்டி எடுத்துக் கொடு" என்றாள் கோமதி.

"அய்யோ. அம்பிகா சிகரெட்டெல்லாம் பிடிக்கமாட்டாம்மா!" என்றான் மகன்.

"எல்லாத்திலேயும் கிண்டலா உனக்கு? வீட்டுக்கு வந்த மருமகளை முதல் காரியமா சாமிக்கு விளக்கேத்தச் சொல்லு."

"பார்த்தியா? உள்ளே வந்ததும், வராததுமா மாமியார்த்தனமா மருமகளை வேலை வாங்கறியே!"

"சும்மா இருங்க" என்று செல்லமாக அதட்டிய அம்பிகா– குத்து விளக்கை ஏற்றி– திரியைத் தூண்டிவிட்டு அவன் அருகில் வந்தாள்.

"வாங்க! உங்க அம்மாகிட்ட ஆசிர்வாதம் வாங்கிக்கனும்" என்றாள்.

இருவரும் கோமதியின் கால்களில் விழ...

கண் கலங்கிச் சொன்னாள் அவள்: "அமோகமா இருக்கனும். எந்திரிம்மா."

**அ**லங்கரிக்கப்பட்ட கட்டிலில் பூக்கள் தூவப்பட்ட மெத்தை மேல் அவள் மடி மீது தலை வைத்துப் படுத்திருந்தான் பன்னீர் செல்வம்.

'கமகம'வென்று சந்தன ஊதுபத்தியின் மணமும், மல்லிகைப் பூக்களின் நறுமணமும் அந்த அறையை நிரப்பி இருந்தது.

"ஏய்! நிஜமா சொல்லனும். நீ எதிர்பார்த்தியா?" என்றான்.

"எதை?"

"நான் உங்க அப்பாகிட்ட நம்ம கல்யாணம் பத்திப் பேசுவேன்னு."

"எதிர்பார்த்தேன்."

"டூப்பு! எப்படி... எப்படி எதிர்பார்த்தே?"

"உங்க பார்வையைப் பார்த்ததுமே உங்க மனசில என்ன இருக்குன்னு தெரிஞ்சுகிட்டேன்."

"நேரா உன்கிட்டயே பேச நினைச்சேன். கூச்சமா இருந்திச்சு. பயமாவும் இருந்துச்சி."

"பயமா?"

"ஆமா! 'நான் உங்கள என் அண்ணன் மாதிரி நினைக்கிறேன்'னு நீ சொல்லிட்டா... என்ன பண்ணுறதுங்கற பயம். இப்ப சொல்லு. ஏன் அன்னிக்கு அப்படிச் சொன்னே?"

"என்ன சொன்னேன்?"

"'காதல்ங்கறது மனசு சம்பந்தப்பட்ட விஷயம் மட்டுமில்லை. தகுதியும் வேணும், எல்லாருக்கும் அந்த தகுதி அமையறதில்லை'ன்னு சொன்னே. சொல்லிட்டு கண் கலங்கினே. இன்னைய வரைக்கும் எனக்கு அதற்கான அர்த்தம் புரியலை. ஏன் அம்பிகா அப்படிச் சொன்னே?"

அவளுக்கு 'திக்' என்றது.

'என்னவென்று விளக்கம் சொல்வது? என் நிலையை நினைத்து அந்தச் சமயம் நொந்து போய் சொன்ன வார்த்தை அது. அதை எப்படிச் சொல்வது?' என்று தடுமாறினாள்.

"அப்ப நான் யாரோ, நீ யாரோ. இப்பதான் ஒண்ணாகியாச்சே... சொல்லு அம்பிகா."

"வேணாங்க. விடுங்க! வேற பேசுவோமே?"

"இந்த நழுவல் எனக்குப் பிடிக்காது. புருஷன் – பெண்டாட்டிக்குள்ளே ஒரு சின்ன இடைவெளி கூட இருக்கக்கூடாது. எதைப் பத்திப் பேசவும் தயக்கம் இருக்கக்கூடாது. சொல்லு... எதுவா இருந்தாலும் சொல்லு. பரவாயில்லை."

"வந்து... என்னோட அந்தஸ்தையும், உங்க அந்தஸ்தையும் நினைச்சுப் பார்த்துதான் அப்படிச் சொன்னேன்."

"நினைச்சேன்! காதல் அதையெல்லாம் தாண்டியது அம்பிகா. இப்ப என்னை சமாதானப்படுத்தறதுக்காக ஏதாச்சும் பொய் சொல்லி இருக்கலாம் நீ. ஆனா, அந்தஸ்தை நினைச்சி தாழ்வு மனப்பான்மையோடு சொன்னதா உண்மை பேசினே பாரு. இதான் எனக்குப் பிடிக்கும். வாழ்க்கையில பொய் ரொம்ப நாளைக்கு ஜெயிக்காது."

அவளுக்குச் 'சுருக்'கென்றது.

அமைதியாக இருந்தாள்.

"இப்ப இதையெல்லாம் பேசி நேரத்தை வீணாக்க வேணாம்னு சொல்றியா?"

"அய்யோ! நான் எதுவும் சொல்லலை. நீங்க பாட்டுக்குப் பேசுங்க."

"நீ சொல்லலை! ஆனா, உன்னோட கண்ணு, உதடு, உடம்பு சொல்லுது அம்பிகா" – என்றவன், அவள் கழுத்தை வளைத்து முகத்தை தன் முகம் நோக்கி நகர்த்தி– அவள் உதடுகளை கவ்வினான்.

அவள் கண்கள் செருகின.



# 10

"சீக்கிரம் அம்பிகா! 'பிரிவியூ தியேட்டர்'ல சரியான நேரம் எல்லாம் பார்க்கமாட்டாங்க. முக்கியமா வரவேண்டியவங்க வந்துட்டாங்கன்னு தெரிஞ்சா, முன்னாலேயே படத்தைப் போட்டுடுவாங்க. காலையிலேயே சொல்லிட்டுத்தானே போனேன்?" என்று அவளை விரட்டியபடி 'பேண்ட்' அணிந்து சட்டையை உள்ளே நுழைத்தான் பன்னீர்.

அந்த தியேட்டருக்கு இவர்கள் சென்றபோது, படம் போடப்பட்டு பலத்த இசை அதிர்வுகளுடன் 'டைட்டில்ஸ்' ஓடிக்கொண்டிருந்தது.

இருட்டில் கண்களைப் பழக்கிக்கொண்டு சென்று– காலியான இருக்கைகளில் அமர்ந்தார்கள்.

அது ஒரு குடும்பப் படம். ஒரு இளைஞன், இளம் பெண் தீவிரமாக ஒருவரை ஒருவர் காதலித்தார்கள். இடைவேளைக்கு இரண்டு நிமிடம் முன்பாக கல்யாணம் செய்துகொள்ள... பத்து காட்சிக்கு முன்பாக சிகரெட் பிடித்தபடி அவளின் பழைய காதலன் வருகிறான்.

இடைவேளைக்குப் பிறகு பழைய காதலன் அவளைப் பல் விதமாக மிரட்டுகிறான். இறுதிக் காட்சியில் தன் கணவனிடம் அவள் உண்மையைச் சொல்ல... அவன் 'அந்த ஏழு நாட்கள்' கதாநாயகன் மாதிரி... 'அதனால் என்ன? இதுக்கு ஏன் பயந்தே? முன்னாடியே சொல்லி இருக்கலாமே?' என்று சொல்லி பழைய காதலனை போலீசில் பிடித்துக் கொடுக்கிறான்.

படம் முடிந்து வெளியே வந்தபோது பன்னீர்செல்வத்தின் முகம் 'கடுகடு'வென்று இருந்தது.

ஸ்கூட்டரை 'ஸ்டார்ட்' செய்த விதத்திலேயே ஒருவித கோபம் தெரிந்தது.

"என்ன படம் எடுத்திருக்கானுங்க? ஏற்கெனவே ஒருவனைக் காதலிப்பாளாம். அதை மறைச்சி கல்யாணம் பண்ணிப்பாளாம். பின்னாடி தெரிய வர்றப்ப, அந்த புத்திக் கெட்ட புருஷன் பரவாயில்லைன்னு ஒத்துக்குவானாம். சரியான முட்டாள்தனம்?"

பின்னால் அமர்ந்து வந்த அம்பிகாவுக்கு 'பக்'கென்றது.

இதயத் துடிப்பு அதிகரித்தது.

"அவ தன் பழைய காதலனைவிட்டு ஏன் பிரிஞ்சா? அதை ஏன் சொல்லாம மறைச்சாங்கிறதுக்கு நியாயமான காரணம் சொல்றாளேங்க!"

"காரணம் நியாயமா இருக்கலாம். புருஷன்கிட்ட மறைச்சது நியாயமா?"

"அவ சூழ்நிலை அப்படிங்க."

"என்ன புடலங்கா சூழ்நிலை...!"

"பழைய காதலை சொல்லக் கூடாதுன்னு அவங்க அம்மா சத்தியம் வாங்கிக்கறானே!"

"அதுக்காக... புருஷனுக்கு துரோகம் பண்ணலாமா? தன் மனைவி தன்னைத்தான் முதல் தடவையா தொடறாள்னுதானே அந்தப் புருஷன் நம்பினான். பழைய காதலன்கிட்ட சின்னச் சின்ன சில்மிஷங்கள் நடந்திருக்காதா? அதையெல்லாம் மறைச்சிட்டு பத்தினி மாதிரி இந்தப் புருஷன்கிட்ட வேஷம் போட்டது என்ன நியாயம்?"

அம்பிகாவுக்கு வியர்த்துப் போனது.

"நானா இருந்திருந்தா– 'போடி நாயே'ன்னு அறைஞ்சி, உதைச்சி– வெளியில அனுப்பி இருப்பேன். 'அதனால என்ன, பரவாயில்லைன்னு' பெரிய தியாகி மாதிரி பேசறான் அந்த கேடுகெட்டப் பய. என்ன தியாகம் வேண்டிக் கிடக்கு இதில் எல்லாம்!"

அம்பிகா எச்சில் விழுங்கினாள்.

"என்ன அம்பிகா... பதிலே பேசமாட்டேங்கறே?"

"சினிமாதானே...! இதுக்கு ஏன் இவ்வளவு உணர்ச்சிவசப்பட்டுப் பேசி உங்க மனநிலையைக் கெடுத்துக்கறீங்க? உலகத்துல எல்லாரும் ஒரே மாதிரி இருப்பாங்களா? இது அந்த டைரக்டரோட சிந்தனை. நீங்க சொல்றது உங்க சிந்தனை!" என்றாள் அம்பிகா.

"அது சரிதான்! படம் 'சென்டிமெண்ட்' காரணமா நல்லா ஓடும். விமர்சனம் செஞ்ச எனக்கு அவமானமா இருக்கும். ஆனா, என் கருத்துல மாற்றமில்லை. எதார்த்தமான நடைமுறை வாழ்க்கையில 'அட்ஜஸ்ட்' பண்ணிக்கிட்டு– 'பரவாயில்லை விடு'ன்னு எவனும் சொல்லமாட்டான்."

வீட்டுக்கு வந்து சாப்பிட்டு, உறங்கும் வரை அந்தப் படத்தைப் பற்றியே கோபமாகப் பேசிக்கொண்டிருந்தான் பன்னீர் செல்வம்.

"**எ**ன்னம்மா சொல்றே நீ?" என்றார், அதிர்ச்சியுடன் ஆறுமுகம்.

"ஆமாம்ப்பா. நான் அவர்கிட்ட எதையும் மறைக்காம சொல்லிடறதுன்னு தீர்மானிச்சுட்டேன்" என்றாள் அம்பிகா.

"முட்டாள்தனமாய் பேசாதே! நீ உண்மையைச் சொன்னா என்ன



நடக்கும்?"

"என்னை வீட்டைவிட்டு அனுப்பிச்சிடுவாருப்பா."

"பின்னே ஏன் அந்தப் பழைய வாழ்க்கையைப் பத்தி சொல்லணும்?"

"உறுத்தல் இல்லாம வாழணும்ப்பா. உண்மையைச் சொல்லி காலில் விழுந்து மன்னிப்பு கேக்கறது நல்லதுன்னு தோணுதுப்பா."

"அம்பிகா"– குரல் உயர்த்தினார் ஆறுமுகம்.

"இதுவரைக்கும் யாராச்சும் உன்னை சந்தேகப்பட்டுக் கேள்வி கேட்டு இருக்காங்களா?"

"இல்லை."

"நீயோ, நானோ சொல்லாத வரைக்கும் இது யாருக்கும் தெரியப்போறதில்லை. பின்னே ஏன் நீ பயப்படணும்? இதைப் பாரு... சத்தியமா சொல்றேன். நீ மட்டும் என் வார்த்தையை மீறி– உறுத்தல், அது இதுன்னு மனசைப்போட்டுக் குழப்பிக்கிட்டு அவர்கிட்ட உண்மையைக்கொட்டித் தொலைச்சேன்னு வையி... அப்புறம் நடக்கற விளைவுகளைப் பார்க்கறதுக்கு உங்க அப்பன் உடம்புல உசுரு இருக்காது. ஆமாம்...!"

"அ...ப்...பா..."

அதிர்ந்தாள் அம்பிகா.


ராணி முத்து

சந்தா விவரம்

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |

வெளிநாடுகள்

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 1,225 |
| ஆறு மாதம் | ரூ. 615 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

மேலாளர்,
'ராணி முத்து',
சென்னை–600 007.


## 11

"**அ**ம்பிகா... பொள்ளாச்சியில் இருந்து பன்னீர் தபால் போட்டிருக்கான். இந்தா, பிரிச்சுப் படி."

உற்சாகமாக வாங்கி, உறையின் ஓரத்தைக் கிழித்து கடிதத்தை

வெளியே எடுக்க– உள்ளிருந்து ரோஜா இதழ்கள் கொட்டின.

அதைப் பார்த்த கோமதி, "சரிதான், நிச்சயமா என்னை ஒரு வார்த்தைக்கூட விசாரிச்சு எழுதியிருக்க மாட்டான். நீயே படிச்சுக்கம்மா" என்று புன்னகைத்துவிட்டு, சமையல் அறைக்குள் சென்றாள்.

இவள் கடிதத்தைப் பிரித்தாள்.

"டியர் அம்பிக் குட்டி! எப்படி இருக்கே? நான் நல்லா இருக்கேன்.

இங்கே வந்ததிலேர்ந்து நல்ல மழை. முதல் மூணு நாள் ஷூட்டிங் எதுவும் நடக்கலை. நேத்தும், இன்னைக்கும்தான் அரை நாள் ஷூட்டிங் நடந்தது. உங்க அப்பா சவுக்கியமா இருக்கார். இன்னும் பத்து நாளாகும், நான் ஊருக்கு திரும்பறதுக்கு. அதை நினைச்சா எரிச்சலா இருக்கு.

இங்கு குளிர் அதிகமா இருக்கு. நீ பக்கத்துல இருந்தேன்னு வெச்சுக்கோ... உன் எலும்பெல்லாம் நொறுங்கிப் போயிருக்கும். நான் ஊருக்கு வந்து– வட்டியும் முதலுமா... 24 மணி நேரமும் உன்னை விடப் போறதில்லை. ஜாக்கிரதையா இரு. அப்புறம்? எங்கே உன் உதட்டைக் காட்டு. ம்ம்ம்மம்ம்... ச்ச்ச்! போதுமா?

பதில் எழுது. அடுத்த முத்தம் அடுத்த கடிதத்தில் தொடரும். அதுவரை உன் சறுக்கு மர இடுப்பைக் கிள்ளி விடைபெறுபவன்.

– பன்னீர்செல்வம்.

அம்பிகாவுக்குக் குறுகுறுப்பாக இருந்தது.

கோமதி கையில் ஒரு கூடையுடன் வந்து, "கபாலீஸ்வரர் கோவிலுக்குப் போயிட்டு வந்துடறேன். வர்றப்ப காய்கறி வாங்கிட்டு வர்றேன். கதவை மூடிக்கம்மா" என்றாள்.

"சரி" என்றவள், அந்த டிசைனை வரைந்து முடித்துவிட்டு, எழுந்து வந்து வாசல் கதவை மூடச்சென்றபோது...

"இரு! நான் உள்ளே வந்ததும் கதவை மூடலாம்" என்று புன்னகையோடு சொல்லிக்கொண்டு நின்றான் தீபக்.

இவன் எதற்கு இங்கே வந்திருக்கிறான்? அதான் எல்லாம் முடிந்து மன்னிப்பு கேட்டுவிட்டு– 'சிஸ்டர்' என்றெல்லாம் சொல்லிவிட்டுப் போனானே!

அவள் யோசித்துக்கொண்டு இருக்கும்போதே, உள்ளே வந்து நாற்காலியில் அமர்ந்து கால்மேல் கால் போட்டுக்கொண்டான்.

"என்ன விஷயம்?" என்றாள், அவனைப் புரியாமல் பார்த்து.

"பேசலாம். கொஞ்சம் உக்காரு! ஸாரி... மரியாதை கொடுக்கணுமில்லே? உக்காருங்க 'மிஸஸ்' அம்பிகா பன்னீர்செல்வம்."



அமைதியாக நாற்காலியில் அமர்ந்தாள்.

"முதல்ல அன்னைக்கு நான் சொன்ன ஒரு வார்த்தையை அழிச்சுடலாம். அழிச்சுட்டு மேற்கொண்டு பேசலாம். அதாவது, அன்னைக்கு 'சிஸ்டர்'னு சொன்னேன் இல்லையா... அதை மறந்துடு. வேணும்னா 'சிஸ்டர் இன் லா'ன்னு வெச்சுக்கலாம்... என்ன?" என்று கண்ணடித்தான்.

"இதோ பாரு! மறுபடி வம்பு பண்ண வந்திருக்கியா?"

"இல்லையம்மா, எனக்குத் தெரிஞ்ச தகவல் சரிதானான்னு தெரிஞ்சுக்கிட்டுப் போக வந்தேன். போன வாரம் ஒரு வேலையா நான் மும்பை போயிருந்தேன். அங்கே ஜம்புநாதன்னு புரோக்கர். பங்கு மார்க்கெட் புரோக்கர் இல்லை. பொம்பளைங்களை 'சப்ளை' பண்ணுறவன். அவன் வீட்டுக்குப் போயிருந்தேன்.

சுவத்துல அவனோட நண்பன் ஒருத்தனோட படம் மாட்டி மாலை போட்டு வெச்சிருந்தான். என்னப்பா விவரம்னு கேட்டேன். அவனோட வாடிக்கையாளரா இருந்து நண்பன் ஆனவனாம். ஒரு லாரி விபத்தில செத்துப் போயிட்டானாம். பேரு வரதராஜன்னு சொன்னான்."

அம்பிகாவுக்கு படபடப்பு ஏற்பட்டது.

எச்சில் விழுங்கினாள்.

"அவன் அத்தோட சொல்லிட்டு நிறுத்தி இருக்கக்கூடாதா? ஒரு மாசம் முன்னாடிதான் 'லைட்பாய்' ஆறுமுகம்னு ஒருத்தர் பொண்ணு அம்பிகாவை கல்யாணம் பண்ணிக்கிட்டான்னு சொல்லித் தொலைச்சான். அட... நம்மகிட்ட பத்தினி வேஷம் போட்ட அந்த அம்பிகாவான்னு எனக்கு ஆச்சரியமாய் போச்சு.

கோவில்ல நடந்த அந்தக் கல்யாணத்துக்கு ஜம்புநாதனும் வந்திருந்தானாம். அப்ப எடுத்த படம்கூட வெச்சிருந்தான். தேவைப்படும்னு ஐநூறு ரூபா கொடுத்து வாங்கிட்டேன். பாரு, இதில் இருக்கிறது நீயா... இல்லை வேற யாராவது 'டூப்' அம்பிகாவா?"

அந்தத் திருமண புகைப்படத்தை சட்டைப் பையில் இருந்து எடுத்துக்காட்டி அவன் கேட்க, அவளுக்கு லேசாக மயக்கமே வந்தது.

"பொம்பளைங்களைக் கூட்டிக்கொடுக்கற ஒரு மாமாவோட நண்பனும் அப்படித்தானே இருந்திருப்பான். உன்னை எத்தனை பேருக்கு வாடகைக்கு விட்டிருப்பான். என்கிட்ட மட்டும்

சிலிர்த்துகிட்டேயே?"

"டேய்... நாக்குல நரம்பில்லாம பேசாதே. நீ சொன்னதெல்லாம் உண்மை. நான் ஏற்கெனவே கல்யாணமாகி விதவை ஆனவ. அவரு ரொம்ப மோசமானவர். அவரால நான் ஒரு நிமிஷம்கூட சுகப்படலைதான். ஆனா, என்னை கேவலப்படுத்திப் பேசாதே."

"சரி... கோவிச்சுக்காதே அம்பிகா. இப்ப நேரா விஷயத்துக்கு வரலாம். உன் புருஷனுக்கு இந்த விஷயம் எல்லாம் சொன்னியாம்மா?"

"இல்லை."

"நான் சொல்லட்டுமாம்மா?"

"தயவுசெஞ்சி என் வாழ்க்கையை கெடுத்துடாதே."

"சரி... வாழ்க்கையைக் கெடுக்கலை. உன்னை மட்டும், அதுவும் ஒரு தடவை மட்டும், அதுவும் உன் சம்மதத்தோட கெடுக்கறேனே... என்ன சொல்றே?"

"தீபக்"– கத்தினாள்.

"ஷ்... கத்தாதே. வெளியில யாராச்சும் கேட்டா நான் என்னவோ உன்னைக் கற்பழிக்கிற மாதிரி நினைக்க மாட்டாங்க? உன் மேல ஆசை வெச்சிட்டேன். வாய்ப்பு கிடைக்கலை. பன்னீர்கிட்டே வந்து சேர்ந்துட்டே. இப்ப வாய்ப்பு கிடைச்சிருக்கு... விடலாமா?

பன்னீர் இப்போ பொள்ளாச்சியில இருக்கான்னு எனக்குத் தெரியும். அவன் வர்றதுக்கு பத்து நாள் ஆகும்னும் தெரியும். நீ தினம் மதியம் ரெண்டு மணிக்கு துணிமணிகள் வாங்க பாண்டி பஜார் போயிட்டு வர்றதும் தெரியும்.

நாளைக்கு மதியம் அதே மாதிரி ரெண்டு மணிக்கு அத்தைகிட்ட 'பர்ச்சேஸ்' இருக்குன்னு சொல்லிட்டு பாண்டி பஜார் வர்றே. அங்கே மேனகா லாட்ஜ்னு இருக்கு. அதில்அறை நம்பர் இருபத்தி நாலுல நான் இருப்பேன். சாயங்காலம் ஆறு மணி வரைக்கும் உனக்காக காத்திருப்பேன். நீ வரலைன்னா..." என்று தன் பாக்கெட்டில் இருந்து ஒரு பஸ் டிக்கெட்டை எடுத்துக் காட்டினான்.

"பார்த்தியா...? பொள்ளாச்சி டிக்கெட் எடுத்து வெச்சிருக்கேன். ஏழு மணிக்கு பஸ், நீ வரலை... நான் புறப்பட்டுடுவேன். மறுநாள் காலையில பொள்ளாச்சியில உன் புருஷனைப் பார்த்து 'போட்டோ'வையும், அதிர்ச்சியையும் கொடுப்பேன். அப்புறம் அவன் உனக்கு என்ன கொடுப்பானோ, வாங்கிக்க... யோசி.

ஒரு தடவை என் இஷ்டத்துக்கு சம்மதிச்சிட்டு வாழ்க்கை பூரா சந்தோஷமா இருக்கிறது நல்லதா, இல்லை வீம்பு பிடிச்சி வாழ்க்கை பூரா



அழுதுகிட்டு இருக்கிறது நல்லதான்னு யோசி. வரட்டுமா டார்லிங்" என்று அவள் கன்னத்தில் தட்டிவிட்டு வேகமாகச் சென்றான் தீபக்.

உறைந்து போய் நின்றாள் அம்பிகா.

கட்டிலில் விழுந்து வாய்விட்டு அழுதாள். ரொம்ப நேரம் அழுதாள்.

மணி பார்த்தாள். காலை 11 மணிதான் ஆனது.

ஒரு தீர்மானத்துக்கு வந்தாள், எழுந்தாள்.

மேஜைக்கு வந்தாள். காகிதம் எடுத்தாள்.

சரசரவென்று எழுதினாள். ஒரு உறையில் போட்டு ஒட்டி 'ஸ்டாம்ப்' ஒட்டினாள். பன்னீர்செல்வத்தின் பொள்ளாச்சி விலாசம் எழுதினாள்.

வீட்டைவிட்டுப் புறப்பட்டு தெருமுனைக்கு வந்து அங்கிருந்த அஞ்சல் பெட்டியில் கடிதத்தைப் போட்டுவிட்டுத் திரும்பி நடந்தாள்.

'நடப்பது நடக்கட்டும்!"

## 12

'புரொடக்ஷன் பாய்' வந்து, "சார் உங்களுக்கு தபால்" என்று கொடுத்துவிட்டுப் போனதும், அந்த உறையில் அம்பிகாவின் கையெழுத்தைப் பார்த்ததும் முகத்தில் பவுடர் அங்கங்கே திப்பித் திப்பியாய் இருக்க, அதைப்பற்றி கவலைப்படாமல் உற்சாகமாக, "மாமா... அம்பிகா தபால் எழுதிருக்கா" என்று குரல் கொடுத்துவிட்டு கிழித்து கடிதத்தை வெளியில் எடுத்துப் படித்தான்.

'அன்புமிக்க என் கணவர் அவர்களுக்கு...

அம்பிகா வேதனையுடன், மன்னிப்புடன் எழுதிக்கொண்டது.

உங்களுக்கு நான் தரப்போகிற அதிர்ச்சி தவிர்க்க முடியாதது.

இனிமேலும் நாடகத்தைத் தொடர நான் விரும்பவில்லை. பின்விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல், உங்களிடம் உண்மை பேச விரும்புகிறேன்.

நாங்கள் மும்பையில் இருந்தபோது என் அப்பா எனக்கு திருமணம் செய்து வைத்தார்.'

கடிதம் நழுவ இருந்தது.

நடுங்கும் விரல்களோடு, முகத்தில் செம்மை படர மேற்கொண்டு படித்தான்.

'ஆனா, அவரோடு நான் வாழ்ந்தது முப்பது நரக நாட்களே! உலகில் உள்ள அத்தனை அயோக்கியத்தனங்களுக்கும் அவர் வாரிசு. தன் சாப்பாட்டில் உப்புக்குப் பதிலாக தினம் என் கண்ணீரைத்தான் சேர்த்துக்கொள்வார். அவரிடம் நான் வாங்கிய அடிகளும், உதைகளும்...! உடலும், மனமும் நைந்து போன சூழ்நிலையில் அவர் ஒரு லாரி விபத்தில் மரணமடைந்தார்.

எனக்கு அதிர்ச்சிக்கு அந்தப்புரத்தில் ஆனந்தம் ஏற்பட்டதுதான் உண்மை. என் தாலி இறங்கியபோது என்னைச் சுற்றி இருந்த முள்வேலி நீங்கியது போலத்தான் உணர்ந்தேன்.

மன மாற்றத்துக்காக அப்பா சென்னைக்கு அழைத்து வந்தார். என்னைப் பார்க்கிற ஒவ்வொருவரும் உச்சுக்கொட்டித் துக்கம் விசாரிக்க வேண்டாமே என்றுதான் நான் விதவைக் கோலத்தை விரும்பவில்லை. கொஞ்ச நாட்களில் என் மோசமான மண வாழ்க்கைகளின் ரணங்கள் ஆறி தழும்புகளான நேரத்தில்தான் நமக்குள் அறிமுகம் ஏற்பட்டது.

இயல்பாக உங்கள் மேல் எனக்குப் பிரியம் ஏற்பட்டாலும், என் உண்மை நிலை என்னைத் தவிக்க வைத்தது. எனது தகுதி பற்றி நான் அன்று ஓட்டலில் பேசியதும் அதனால்தான். நீங்கள் அப்பா மூலம் உங்கள் விருப்பம் சொன்னபோது மகிழ்ந்தேன்.

உண்மையைச் சொல்லி அதற்குப்பின் நீங்கள் சம்மதித்தால் திருமணம் செய்துகொள்வதாக அப்பாவிடம் வாதாடினேன். அவர் ஏற்கவில்லை. உண்மையைச் சொல்ல வேண்டாம் என்றார். விபூதி, குங்குமத்தைப் பொட்டலம் கட்டிப் போட்டு தெய்வ உத்தரவு கேட்டார். அதில் 'உண்மைகளைச் சொல்ல வேண்டாம்' என்று வந்தது.

எனவே, நான் வாய்மூடி மவுனியானேன்.

ஆனால், திருமணத்துக்குப் பிறகு நீங்கள் என் மேல் காட்டும் அன்பின் திக்குமுக்காடல் முழுவதையும் அனுபவிக்க முடியாமல் அந்த உறுத்தல் இருந்துகொண்டே இருந்தது. சொல்லிவிடுகிறேன் என்று என் அப்பாவிடம் சொன்னபோது, 'நீ சொன்னால் தற்கொலை செய்துகொள்வேன்' என்று மிரட்டி என்னை மறுபடி வாய்க்குப் பூட்டு போடச் செய்துவிட்டார்.

இன்று தீபக் என்னைச் சந்தித்தான். என் பழைய வாழ்க்கையை தெரிந்துகொண்டு வந்து மிரட்டினான். அவன் ஆசைக்கு நான் இணங்காவிட்டால், உங்களிடம் வந்து உண்மைகளை ஆதாரத்தோடு சொல்வதாக மிரட்டிவிட்டுப் போனான்.





அவன் ஆசைக்கு இணங்கிவிட்டு உங்களோடு வாழ்க்கையைத் தொடரும் கேவலமான செயலை செய்வதைவிட, உண்மைகளை உங்களுக்குத் தெரிவித்துவிட்டு– அதனால் ஏற்படும் விளைவுகளைத் துணிச்சலுடன் சந்திக்க முடிவு செய்தே இக்கடிதம் எழுதினேன்.

என் உடலில், பழைய வாழ்வில் களங்கம் இருக்கலாம். ஆனால், மனதில் களங்கம் இல்லை.

என் வாழ்வில் என் மனசுக்குள் உங்கள் ஒருவருக்கு மட்டும்தான் இன்றும், இனி என்றும் இடம் உண்டு. நீங்கள் எனக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். என்னை வெளியேறச் சொன்னாலும் தயார். அவமானப்படுத்தினாலும் தயார். ஆனால், என் மனசுக்குள் நான் உங்களோடு வாழ்ந்துகொண்டுதான் இருப்பேன்.

மன்னிக்கக் கோரும்,<br>அல்லது தண்டனை கோரும்<br>**அம்பிகா.**

குளியல் அறையில் இருந்து வெளியே வந்த ஆறுமுகம், "என்ன மாப்பிள்ளை... அம்பிகா என்ன எழுதி இருக்கா?" என்று கேட்க...

கண்கள் சிவந்து கோபத்தின் உச்சத்தில் இருந்த பன்னீர்செல்வம், "ஏன்யா! என்னை இளிச்சவாயன்னு நினைச்சீங்களா? உங்க பொண்ணுக்கு வாழ்க்கை கொடுக்கறதுக்கு நான்தான் கிடைச்சேனா? எவ்வளவு பெரிய பித்தலாட்டம் பண்ணி இருக்கீங்க... அப்பாவும், பொண்ணுமா சேர்ந்து. எல்லாம் எழுதிட்டா... படிச்சுப் பாருங்க" என்று அவரை நோக்கிக் கடிதத்தை எறிந்தான்.

## 13

ஒரு புலியின் ஆவேசத்துடன் டாக்ஸியை விரட்டி இறங்கியதும், வீட்டுக்குள் நுழைந்தான் பன்னீர்செல்வம்.

சூட்கேஸை விசிறியடித்தான். தன் அம்மா அமர்ந்து இருப்பதைக்கூட அலட்சியப்படுத்தினான்.

"எங்கே... எங்கே அவ? ஏய்! அம்பிகா... வாடி இங்கே."

சமையல் அறைக்குள் இருந்தவளைப் பார்த்துக் கத்தினான்.

நடுங்கியபடி மெதுவாக வந்தாள் அம்பிகா.



எழுந்துகொண்ட அவன் அம்மா கோமதி, "என்னடா...என்னாச்சு உனக்கு?" என்றாள்.

"அம்மா, உனக்குத் தெரியாது. ஏண்டி இன்னும் இங்கே நிக்கிறே? என்ன யோக்கியதை இருக்கு இன்னும் இந்த வீட்டுக்குள்ளே நீ நிக்கறதுக்கு... போ. போடி வெளியே. நான் கொலைகாரன் ஆகறதுக்குள்ளே போயிடு."

மருட்சியுடன் பார்த்தாள் அம்பிகா!

"டேய்... இருடா. என்கிட்ட பேசு. வந்தே, நீ பாட்டுக்கு அவளை வெளியில போன்னு சொல்றே. என்ன விவரம்?" என்றாள் அம்மா.

"அம்மா, இந்தச் சண்டாளி ஏற்கெனவே ஒருத்தனோட கூத்தடிச்சவ."

"இருடா... கத்தாதே. அதுக்குப் பேர் கூத்தில்லை. கல்யாணம்"– என்ற அம்மாவை ஆச்சரியத்துடன் பார்த்தான் பன்னீர்செல்வம்.

"அம்மா! உனக்கு... உனக்கு."

"எல்லாம் தெரியும்டா. நேத்து அந்தத் தீபக் வந்துட்டுப் போனப்ப நான் வெளியில போயிருந்தேன். உனக்கு கடிதம் எழுதி அனுப்பிட்டு இவ சமையல்கட்டுல என்ன பண்ணிகிட்டு இருந்தா தெரியுமா? மண்ணெண்ணெய் எடுத்து தலையில ஊத்தி நனைச்சி, பத்த வெச்சுக்கப் போனா.

நல்ல வேளையா அப்போ நான் வந்துட்டேன். தீப்பெட்டியைப் பிடுங்கி எறிஞ்சிட்டு– 'பாவி மகளே என்னடி இது?'ன்னு கேட்டேன். அழுதுகிட்டே உன்கிட்ட கடிதத்துல எழுதின அத்தனை விவரத்தையும் சொன்னா. அவ செஞ்சதில பெரிய தப்பு எதுவும் இல்லைன்னு பட்டுது. நான் மன்னிச்சுட்டேன். அதே பெருந்தன்மையோட நீயும் அவளை மன்னிச்சிடுறதுதான் முறை" என்றாள் கோமதி.

"நீ பொம்பளை! அவ அழுதுகிட்டே சொன்னதும் உருகிட்டே. எவ்வளவு பெரிய அயோக்கியத்தனம் இது. ஒரு சின்ன விஷயத்தில்கூட சுத்தமா இருக்கணும்னு நினைப்பனேம்மா. எனக்கு அமைஞ்ச மனைவி சுத்தமா இல்லையே! இதை எப்படி நான் ஏத்துக்கறது?

இவளைப் பார்த்தாலே எனக்கு இப்ப அருவருப்பா இருக்கும்மா. இன்னொருத்தனை தொட்டவள்னு மனசுல நினைப்பை வச்சிகிட்டு, இவளோடு எப்படிம்மா குடித்தனம் நடத்த முடியும்? நீ மன்னிச்சி இருக்கலாம். என்னால முடியாது. அவ சொல்லாம இருந்ததுக்கு நியாயமா ஆயிரம் காரணங்கள் இருக்கலாம். ஆனா, இனிமே என்னால இவகூட வாழ முடியாது. அவளைப் போகச் சொல்லு" என்றான்.

தீர்மானமாக.

"நான் போயிடறேன். சாகப் போன என்னை ஏன் காப்பாத்தி சமாதானப்படுத்தினீங்க? இப்படி அவமானப்படுத்தறதுக்கா?" என்று அழுதாள் அம்பிகா.

"அம்மா, நான் போய் தலை முழுகப் போறேன் - இவளையும் சேர்த்து! திரும்பி வர்றப்ப இவ இங்கே இருக்கக்கூடாது" என்று நகர்ந்தான்.

"நில்லுடா" என்று ஓங்கிச் சொன்னாள் கோமதி.

நின்றான்.

திரும்பிப் பார்த்தான்.

"இவ உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு எத்தனை மாசமாச்சி... சொல்லு?"

மூணு மாசமாச்சி. அதுக்கென்ன...?"

"உனக்கென்ன வயசு?"

"இருபத்தி எட்டு."

"மூணு மாசமா ஒரு உண்மையை மறைச்சவளுக்கு இதுதான் உன் தண்டனைன்னா, இருபத்தி எட்டு வருஷமா ஒரு உண்மையை மறைச்சவளுக்கு என்ன தண்டனைன்னு சொல்லிட்டுப் போய் அவளுக்கும் சேர்த்து தலைமுழுகு."

முகத்தில் ரத்தம் பாய தன் அம்மாவைப் பார்த்தான் அவன்.

"அம்மா... என்ன சொல்றே நீ?"

தடுமாறினான்.

"ஒரு பொண்ணோட வாழ்க்கை கேள்விக்குறியா நிக்கிற இந்த நேரத்துல நான் இதைச் சொல்லாம இருக்க முடியலைப்பா. என்ன சொன்னே...? இவளைப் பார்த்தா உனக்கு அருவருப்பா இருக்கா? இவ சுத்தம் இல்லாதவளா? கட்டின புருஷனோடதான் வாழ்ந்திருக்காளே தவிர, காசுக்காக உடம்பை விக்கலைடா!

உனக்கு இப்ப கொடுக்கப்போற அதிர்ச்சிக்கு மன்னிச்சிடு. நான் உன் அம்மா இல்லைடா. உங்க அப்பா வெச்சிருந்த ஒரு வப்பாட்டியோட புள்ளை நீ. அவருக்கு முன்னாடி, பல பேர் வப்பாட்டியா வச்சிருந்தாங்க அவளை. உன்னைப் பெத்துட்டு அவ செத்துட்டா. குழந்தை இல்லாத நான், உன்னை வளர்க்கிறதாச் சொல்லி வாங்கிக்கிட்டேன். உன்னை அருவருப்பா பார்த்து வளர்க்கலைடா! சுத்தம், சுத்தம்னு அடிச்சுக்கறியே... எந்தச் சுத்தப் பின்னணியில நீ பொறந்தேன்னு புரிஞ்சுக்கோ. அதுக்காக உன்னை நான் வெறுத்ததில்லைடா."



"அம்மா" என்று அலறினான்.

அவள் கால்களில் வந்து விழுந்தான்.

"அம்மா... அம்மா" என்று வேறெந்த வார்த்தையுமின்றி அழத் தொடங்கினான்.

அவனைத் தூக்கி நிறுத்தி அணைத்துக்கொண்ட கோமதி, "வெளிச் சுத்தம் முக்கியம்தான். அதைவிட மனச் சுத்தம்தான் ரொம்ப முக்கியம். அவ மனசு சுத்தமா இருக்கு. அவளோடு குடும்பம் நடத்து."

தலையைப் பிடித்துக்கொண்டு அப்படியே நாற்காலியில் விழுந்தான்.

கொஞ்ச நேரம் அழுதுகொண்டே இருந்தான். நிமிர்ந்தான். தன் கண்களைத் துடைத்துக்கொண்டான்.

"என் வாழ்க்கையில இவ்வளவு பெரிய அதிர்ச்சி இருக்கும்னு எனக்குப் புரியலைம்மா. யாரைப் பத்தியும் அருவருப்பா பேச எனக்குதாம்மா இப்ப யோக்கியதை இல்லை.

எனக்கு விஷயத்தைத் தெரிவிச்சுட்டு, தன் உயிரையே விடத் துணிஞ்சி மண்ணெண்ணெய் ஊத்திக்கிட்ட இவளோட நேர்மையும், சுத்தமும் என் முரட்டு புத்திக்குப் புரியாமல் போச்சும்மா."

எழுந்து அம்பிகாவின் அருகில் வந்தான்.

"அம்பிகா! நான் கடுமையா சொன்ன வார்த்தைகளை எல்லாம் மறந்துடு. என்னை மன்னிச்சிடுன்னு இப்ப நான்தான் சொல்லணும்."

"அய்யோ... என்னங்க இது" என்று அவள் அவன் கால்களில் விழ, அவளைத் தூக்கி நிறுத்தினான் அவன்.

**ம**றுநாள் காலையில்...

குளித்துவிட்டு, சாமி படம் முன்பு நின்று வணங்கிக்கொண்டிருந்த பன்னீர் செல்வம் முன்பாக வந்து நின்றாள் கோமதி.

"என்னப்பா, மனது தெளிவாயிடுச்சா... இனிமே எந்தக் கலக்கமும் இல்லையே?" என்றாள்.

"இல்லைம்மா. அவளை நான் முழு மனசோட ஏத்துக்கிட்டேன்."

"இதில் எந்த மாற்றமும் இல்லையே?"

"இல்லைம்மா."

"நாளைக்கு திடீர்னு மனசு மாறி, வெளியில போடீன்னு நிச்சயமா

சொல்லிடமாட்டியே?"

"மாட்டேன்ம்மா. அவளே வெளியில போறேன்னு சொன்னாலும், உதைச்சு வீட்டுக்குள்ளே அனுப்புவேன்."

"சாமிப்படத்துக்கு முன்னாடி வச்சி கேக்கறேன். எங்கே, அவளைப் பிரியமாட்டேன்னு சத்தியம் பண்ணு."

"என்னம்மா இன்னும் என்னை நீ நம்பலையா? சரி, சத்தியமா நான் அவளை எந்தச் சந்தர்ப்பத்திலயும் பிரியமாட்டேன்... போதுமா?" என்று அவள் கையைப் பிடித்து சத்தியம் செய்தான்.

"அப்பாடா... இப்ப நான் உண்மையைச் சொல்லிடலாமில்லையா?

"உண்மையா... என்னம்மா மறுபடியும்?"

"உன்னைப் பத்து மாசம் சுமந்து பெத்தது இதே வயிறுதாண்டா! மூக்கையும், முகரையையும் பார்த்தா தெரியலை?"

"அம்மா! நேத்திக்கு நீ..."

"நீ பேயோட்டறவன் மாதிரி கிடந்து குதிச்சே. உன்னை ஒரு வழிக்குக் கொண்டு வர்றதுக்காக அப்படி ஒரு அதிர்ச்சி வைத்தியம் செஞ்சேன். உங்க அப்பா ரொம்ப யோக்கியமா வாழ்ந்துட்டு போனவருப்பா. ஒரு பேச்சுக்காகன்னாலும் அவரைத் தப்பாச் சொல்லிட்டோமேன்னு மனசு உறுத்திச்சு. அதான் இப்ப சொல்லிட்டேன்."

"அம்மா" என்று கண் கலங்கினான்.

"இப்ப எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா? நீ வருத்தப்படாதேம்மா. ஒரு நல்லதுக்காகத்தானே அப்படிப் பொய் சொன்னே?"

"அதே மாதிரி தன் பொண்ணுக்கு ஒரு நல்லது நடக்கணும்னுதானே உன் மாமனாரும் உண்மையை மறைச்சிட்டார். போ... போய் அவர்கிட்ட முகம் கொடுத்துப் பேசு" என்றாள் கோமதி.

" கூடத்தில் அமர்ந்திருந்த ஆறுமுகத்திடம் வந்த பன்னீர்செல்வம், "ஆத்திரத்தில் எக்குத்தப்பாய் பேசிட்டேன். என்னை மன்னிச்சிடுங்க மாமா" என்றான்.

ஆறுமுகம் தன் விழிகளை துடைத்துக்கொள்ள, இந்தக் கதை முடிவுக்கு வருகிறது.

(முற்றும்)